சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தேவாரச் சிவதல வெண்பா

937

திருக்கைலாய பரம்பரைத்

திருவாவடுதுறை யாதீனத்துச் சிஷரும்

ஷை ஆதீனத்து மஹாவித்வான்

**ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள்**

மாணாக்கரும்,

தில்லை விடங்கன் பிரபல வித்துவான்

**மாரிமுத்துப் பிள்ளை யவர்கள்**

புத்திர பிர பௌத்திரரும் ஆகிய

வெண்பாப் புலி

## தி. சு. வேலுசாமிப் பிள்ளை

யவர்களால் இயற்றப்பெற்று ;

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை

நாயனார் பிரஸ்

**நெ. மு. ஷ. ஷண்முகசுந்தர நாயனார்**

அவர்கள் நன்முயற்சியால்

சென்னை

அரோரா அச்சி யந்திர சாலையிற்

பதிப்பிக்கப் பெற்றது.

1921

9317

## ஆக்கியோன் பெயர் முதலியன.

### எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

திருமன்ற மாதி திருமலை யீருந்
தேவாரச் சிவதல வெண்பா
வருமன்ற லிதழி யானரு ளாற்செய்
தாங்கேற்றி னானன்பர் மகிழக்
குருமன்றன் கழலிற் குலவன்பன் கங்கா
குலன் வெண்பாப் புலிபன்னூ னவின்றோன்
றருமன்றண் டலைசூழ் தனித்தில்லை விடங்கத்
தலன்வேலுச் சாமிநா வலனே.

### நேரிசை யாசிரியப்பா.

அன்னவன் றகைமை யின்னமும் பகர்வன்
வருங்கயி லாய பரம்பரை யாய
துறைசையம் பதியி னுறைசைவ சிகாமணி
யொப்பி லருந்தவச் சுப்பிர மணிய
தேசிகர் தம்பாற் றீக்கைகள் பெற்றோ
னாசிக லகன்றோ னவனியி லுள்ளார்
கம்ப னயுதங் கவிசெய் தனனென்பர்
வம்பவிழ் சிரகிரி வாழ்பெரும் புலவன்செய்
புராணம் பற்பல பிரபந்த மெண்ணில
விலக்கங் குறித்திடி னிலக்கமா மறிஞர்
துதிதரு மீனாட்சி சுந்தரநா வலன்வயின்
மதிதரு பன்னூல் வயங்கிடக் கற்றோன்

செம்பொனம் பலத்தி னம்பு னடம்புரி
குஞ்சித மலர்த்தே னெஞ்சித முறக்கொள்வோன்
வியப்புற வண்ணு னியற்றிய நூல்கள்
மாக்கந்த புராணவெண் பாக்கச்சூர்ப் புராணம்
கோட்டமி லிலம்பையங் கோட்டூர்ப் புராணம்
மிக்கசீர்த் திருவேட் டக்குடிப் புராணம்
தடங்கமழ் தில்லை விடங்கப் புராணம்
முத்தமிழ்க் கவிமாரி முத்துப் பிதாமகன்
விரகன் சரிதசங் கிரகச் செய்யுள்
கம்மணிக் கோபுரக் கற்பக விநாயகர்
மும்மணிக் கோவை முன்னரும் பன்மைய
மமர்தில்லை நிரோட்டக யமகவந் தாதி
வளங்கெழு தேவார வைப்புச் சிவதலக்
களங்கமி றிரிபுக் கட்டளைக் கலித்துறை
அணிகிள ரிரட்டை மணிமாலை நவமணி
மாலை பஞ்சரத் தினமாலை பலவே
வெண்பா முதலிய பண்பா ரகவல்
கட்டளைக் கலித்துறை கட்டளைக் கலிப்பா
வஞ்சி யொடுவிருத் தஞ்சில வகையின்
அதிசயங் கூர்பல பதிகமின் னவற்றிற்
கூடிய தொகையைக் கூட்டிடிற்
பாடிய கவியோர் பதினு யிரத்ததே.

## திருக்கைலாய பரம்பரை

### திருவாவடுதுறை யாதீனம் ஞான நடராசர்பூசை

### சுப்பிரமணிய சுவாமிகளியற்றியருளிய

### சிறப்புப்பாயிரம்

### நேரிசையாசிரியப்பா

இரசித கிரியி னினிதுவீற் றிருக்கும்
பரசு பாணி பசுக்க ளுய்வணம்
பாரினிற் கோயில் கொண் டெழுந்தருள் பஃறலைப்
பான்மையை விரித்துப் பகரை யடிகள்
விளம்பு கேத்திர வெண்பா வெனுநூல்
தன்னிற் சிறிதே சார்தலை யோர்ந்து
தமிழ் மறைத் துதிகள் சார்தல வெண்பாச்
சொன்னயம் பொருணயந் துலங்குற வியற்றிச்
சிற்சபை முன்னர்ச் சிவனடி யார்கள்
பற்பலர் குழீஇய நற்சபை யதனில்
சாலிவாகன சகாத்த மாயிரத்
தெண்சத முப்பா னியைந்த நான்கினில
விரோதி கிருது விளம்பு வற்சர
மிதுன மாமதி விளங்குறு மிரண்டாந்
தேதி புகர்வாரஞ் செப்பவிட் டந்தனு
நாளும் லக்கினமு நண்ணிய சுபதின
மெவரும் வியப்ப வினிதரங் கேற்றினோன்
கற்பக விநாயகர் கவிஞர் மும்மணிக்
கோவையுந் தில்லை நிரோட்டக யமக
வந்தாதி யோடு மணிகிளர் கந்த
புராண வெண்பாவும் புரிவுட னியற்றினோ
னாவடு துறைவா மருட்பஞ் சாக்கர
தேசிகர்க் கீரெட் டாகும் பிற் றோன்றலை

வருமணி சுப்பிர மணியதே சிகனுங்
குருமணி தன்பாற் கூறுப தேசம்
பயன் பெறப் பெற்ற பான்மை யுடையோன்
நற்றுறை சைச்சிவ ஞான யோகி
கச்சி யப்ப முனிவன் கழலிணை
சிந்தை செய்து சிவபுரா ணங்கள்
தரணியோ ருய்யத் தந்த செந்தமிழ்க்கடல்
திங்க டவழ்தருந் திரிசிரா மலைவா
ழாளுப் புகழ்மை மீனாட்சி சுந்தரப்
பாவலர் பெருமான் பாற்கலை பயின்றோன்
தில்லை யங்கத் திருநக ருதித்துப்
புலியூர் வெண்பா வாதிய புரிந்த
மாரிமுத்து வள்ளல் பௌத்திரற்
பிற்றோன் றலாகப் பிறங்கா நின்ற
வரநதி குலத்தில் வந்தினி துதித்த
தூய குணமார் சுப்ப ராயச்
செம்ம றனயனுத் திகழ்தரத் தோன்றினேன்
வெண்பாப் புலியென வியந்தேயரசு
ரொண்பா வலர்க ளுரைக்கு நலத்தினேன்
குலமார் கல்விக் குரிசில்
நலமார் வேலுச் சாமிநா வலனே.

---

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீருலவு வேலுசா மிக்கவிஞன் செய்தசிவதல வெண் பாவைப்
பாருலவும் படியச்சிற் பதிப்பித்து நல்கினன் பரமனேயு
னேருலவு மவனு மினிதுலகி னினையாதா ரெவருமில்லை
காருலவு மனன் கா. ரா. நமச்சிவா யப்பெயர்கொ ளுவலோனே

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தேவாரச் சிவதல வெண்பா

## பாயிரம்

### கற்பகவிநாயகர் காப்பு

நேரிசை வெண்பா

புவனிதுதி மூவர் புகல்பதிகம் பெற்ற
சிவதலவெண் பாநவிலச் சித்தத்—திவர்ந்தருளுங்
கற்பகமா தங்கங் கவினவைத்தோ னல்குதில்லைக்
கற்பகமா தங்கங் களித்து. (௧)

### நடராசப்பெருமான்

தன்னாக வல்லி தடங்கண் மலர்பூப்பப்
புன்னாகம் பாங்கிற் பொலிந்தேத்த—வின்னாக
னன்னா டகமே நவிற்றுமெழிற் குஞ்சிதத்தா
ளென்னா டகமேவு மே. (௨)

### சிவகாமித்தாயார்

மன்னாட்ட மேல்வைக்கும் வான்கருணைக் கான்குவளை
மன்னாட்ட வெற்பணங்கு வண்கதிமே—லென்னாட்ட
மார்ந்ததனா ணந்தருளி னன்ன தளிக்குமருள் (௩)
கூர்ந்ததனா னந்தக் கொடி.

## தக்ஷிணாமூர்த்தி

முன்னால் வருக்கு மொழியா துணர்த்திநா
னன்னா னிருந்தநிலை யாய்ந்துநெஞ்சே—கொன்னாரு
மல்லால நீழ லளிக்கவேற் றுண்டபிரான்
கல்லால நீழலங் கண். (௪)

## விநாயகர்

பற்பல் பதிதோறும் பற்பல் பெயர்பூண்டு
பற்பலவா நற்பதமும் பாலிக்கும்—பற்பல்
வடிவா ரொருத்தன் மதலையே ரம்பன்
வடிவா ரொருத்தன் மகிழ்ந்து. (௫)

## வைரவக்கடவுள்

பாலநய னன்கேத்ர பாலன் றிரிசூலன்
பால வயிரவப்பேர்ப் பண்ணவன்க—பால
னொருவா மனனே யுரிக்கஞ்சு கன்றாண்
மருவா மனனே வழுத்து. (௬)

## வீரபத்திரக்கடவுள்

அவியுண்ட தேவரெலா மாவியுண்டோ வென்னத்
தவியுண் டலமந்து சாம்பப்—புவிமகத்திற்
றாத கமலநெஞ்சேய் தக்கனைக்கா யுக்கிரன்பொற்
பாத கமலநெஞ்சே பற்று. (௭)

## சுப்பிரமணியக்கடவுள்

கந்த மலர்தூய்க் கருது மடியா ருளத்தின்
முந்தறிவின் முன்னிற்பன் முன்னெஞ்சே—சந்தமல
ரான்றுதொ றாடு னொளிர்கிண் கிணிசிலம்பக்
குன்றுதொ றாடுங் குகன். (௮)

### திருநந்திதேவர்

சிந்தனைசெய் நெஞ்சே சிவபதமே காட்டுமுன
நிந்தனைசெய் தாரையடு நித்தனும்பர்—வந்தனைசெய்
மன்னந்தி வண்ணன் மகிழ்கயிலை காக்குமெங்கோன்
பன்னந்தி வண்ணற் பதம். (௯)

### நால்வர்

சைவ சமயமே சற்சமய மச்சமயத்
தெய்வமே யெச்சமயத் தெய்வமுமெண்-டெய்வமெ
தேவார வாசகத்திற் தேற்றியரு ணல்வர்தா [னத்
ணவார வாழ்த்துவே ணன். (௰)

### இதுவுமது

மன்மணங்கா ணன்பரெலாம் வான்வீட்டில் வாழ
வுய்த்தோன்,
கன்மிதப்பி லாழி கடந்துவந்தோன்—கொன்முதலை,
யுண்சே யழைத்தளித்தோ னூமைமின்னைப் பேசுவித்
னெஞ்சே யடிதொழுவேன் யான். [தோ (௧௧)

### தண்டியடிகள்

வீரகத்தி நீங்க விமலனைப்போற் றேந்தலுட்க
நாரகத்தி ருதையட்டு நம்பனையோ—ரோகத்திற்
சிந்தையா மந்தணத்தர்ச் சித்தவற்கு முத்திநல்கு
தந்தையா மந்தணன்றாள் சார். (௧௨)

### ஐயடிகள் காடவர்கோனாயனார்

சிவதலங்க டோறுமே சென்றெவ்வோர் வெண்பா
நவமுறமுன் பாடியரு ணல்ல—தவமுடைய
வையடிகள் காடவர்கோ னம்போ ருகமிகரு
மையடிகள் காதலினுள் வாம். (௧௩)

## அருணந்திசிவாசாரியர்

பத்திவை ராக்கியத்திற் பற்பலவாத் தொண்டேற்றி
முத்தி யடையருபான் மூவராந்—துத்தியரா
வாதார விந்தம் பணிசடையார்க் கன்புடையார்
பாதார விந்தம் பணி. (கச)

## மெய்கண்ட சிவாசாரியர்

மைய லுறுபிறவி மாழ்கடலி லாழ்பவர்க
ளுய்ய வொருபுணையி னுற்றருள்கூர்—செய்யசிவ
ஞானபோ தந்தமிழ்செய் நற்குரவன் பொற்கழல்க
ளானபோ தந்தலைவைப் பாம். (கரு)

## உமாபதி சிவாசாரியர்

அளிக்குமயன் மாற்கு மரியனருள் கொண்டே
முளிக்குமுன முத்திநல்கு மூர்த்தி—தெளிக்குநெஞ்
சைவசித் தாந்தத் தனிநூ லியற்றியரு [சிற்
ஜீவசித் தாந்தரங்க மாங்கு. (கசு)

## பஞ்சாக்கர தேசிகர்

தன்னுமங் கொண்டே தனைத்தெரிவித் தேநானெ
னென்னும நீக்கி யினிதாண்டான்—றுன்னும
லஞ்சாக் கரனு மவிர்துறைசை மூலகுரு
பஞ்சாக் கரனும் பரன். (கஎ)

## சுப்பிரமணிய தேசிகர்

காரிமன் றாருமங் கவின்செய் துறைசையிற்சீர்
சேர்சுப் பிரமணிய தேசிகன்பொன்—னேர்மன்
னடிக்கமல மாக மரும்ப வணிந்தேன்
முடிக்கமல மாக முனம். (கஅ)

### அம்பலவாண தேசிகர்

உள்ள மெனுஞ்சுரும்ப ருண்டு களிக்குமா
றெள்ளமிர்த வாவி திகழ்துறைசை—வள்ளலாம்
பங்கமலம் பாற்றம் பலவாண தேசிகன்றாட்
செங்கமலம் பாற்றதம்பு தேன். (௧௯)

### வித்யா குரு

சுலவுபுகழ் மீனாட்சி சுந்தரப்பே ராசான்
பலதலபு ராணம் பகர்ந்தான்—றலவெண்பா
வொன்றியற்றி னேனன்னா னொண்டிறமைக் கஃதுதகு
மென்றிறமைக் கேற்றதுவே யீது. (௨0)

### நூல் செய்தற்குக் காரணம்

ஐயடிகள் காடவர்கோ னன்போ டியற்றியருள்
செய்ய தனிக்கேத் திரவெண்பா—வையகத்தி
லிலா திருப்பதுன்னி நாதனருள் கொண்டுமுற்று
மேலா வியற்றினேன் யான். (௨௧)

### அவையடக்கம்

கற்பனைக்கு கந்தவனைக் கற்பனைக்கி கந்தவனைக்
கற்பனைக்கு ளாக்கக் கடவனே—நற்புலவீ
ரென்பாக்கள் வெண்பாக்க ளேனீவிர் சிந்தைகூர்ந்
தன்பாக் கொளக்கடவீ ராய்ந்து. (௨௨)

### சிறப்புப்பாயிரம்

தேவாரம் பெற்ற சிவதலவெண் பாநவின்றான்
மேவாருன் வேலுசா மிக்கவிஞன்—றாவாப்
புலியூர்வெண் பாநுவன்றோன் புத்ரபிர பௌத்ரன்
மலிதில்லைவி டங்கநகர் மன். (௨௩)

பாயிரம் முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தேவாரச் சிவதல வெண்பா

---

## சோழநாட்டில்

### காவேரிக்கு வடகரையிலுள்ள சிவதலங்கள்

### கோயில் ஆகிய சிதம்பரம்

நேரிசை வெண்பா

தொடுத்தமலர்க் கோதையுமை தொன்முனிவர் காண
வெடுத்தகழற் பூமதுநெஞ் சென்மா—வடுத்தருந்தப்
பொன்னம் பலவா புரிந்தருள்வாய் பாழ்ஞ்சனன
மின்னம் பலவா வெடாது. (௧)

### திருவேட்களம்

வேடனென வெம்போர் விசயனொடு செய்தவனும்
வேடனெச்சில் வேட்டவனும் விற்கழைக்கே—நேட
வருவேட் களஞ்சேர் மலர்நல்கு பொங்கர்த்
திருவேட் களஞ்சேர் சிவன். (௨)

### திருநெல்வாயில் ஆகிய சிவபுரி

நினக்குஞ் சுகமுண்டு நெஞ்சே துயர்கூ
ரெனக்கு மிகவு மினிதே—யுணற்கரிய
நல்வாயி லானை நனியாண்ட பெம்மானை
நெல்வாயி லானை நினை. (௩)

. 9317



## திருக்கழிப்பாலை

உருவா யருவா யுருவருவாய் நிற்பன்
குருவா யுகந்துண்மை கூற—வருவான்
செழிப்பாலை யாரா சினிவா னளாவுங்
கழிப்பாலை யாரார் களன். (௪)

## திருநல்லூர்ப் பெருமணம் ஆகிய ஆச்சாபுரம்

ஞானசம் பந்தர்த நன்மணத்தி லேசோதி
யானவுருக் கண்டிருக்க லாநயனப்—பானற்
றிருமணத் தாயன் றெரிந்திலன்கொ னல்லூர்ப்
பெருமணத் தாய பிரான். (௫)

## திருமகேந்திரப்பள்ளி ஆகிய கோயிலடிப்பாளையம்

நான்மறையி னுறு நவிலற் கரியதென்றல்
யான்முறையிற் சொல்வதெங்க னேறுபரி--யான்மன்
கேகந்திரப் பள்ளியான் கைதொழுது போற்று
மகேந்திரப் பள்ளியான் மாண்பு. (௬)

## தென்றிரு முல்லைவாயில்

வந்ததமர் பார்த்துய் வகையில்லை யென்றழுங்க
வைந்து புலனு மறிவிழுந்தே—யந்தமுறு
மெல்லைவா யில்லை யெழுமுன் றெனுதிரு
முல்லைவா யில்லையை முன். (௭)

## திருக்கலிக்காழுர் ஆகிய அன்னப்பன் பேட்டை

பற்பலநூல் கற்றும் பயனில்லை மானிடர்மேற்
சொற்பனுவல் சொல்லிச் சுகமுமில்லை—பொற்பை
கலிக்காழு ரென்றே கருதித் துதிமின்
கலிக்காழு ரென்றேவைக் கண்டு. (௮)

### திருச்சாய்க்காடு ஆகிய சாயாவனம்

கற்புத் தழைத்துக் கருணை கனிபூத்தே
யற்புக் கனிதந் தருள்பெற்ற—விற்பனியார்
தாய்க்காடு மம்மான் றயங்குகரன் வேய்க்காடுஞ்
சாய்க்காடு மம்மான் றலம். (௯)

### காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரம்

ஒரு மிடத்தோ ரொளிர்சுடர்கண் மூன்றுமவன்
பாருடனே யெல்லாப் பயனுமவன்—மேருவெனு
கல்லவ னீச்சரமாங் காவிரிப்பூம் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமாண் பன். (௧0)

### திருவெண்காடு

என்னைத் தெரிவித்தே யின்னருள்செய் கில்லானேற்
பின்னைப் பிறப்பறுக்கும் பெற்றியரார்-பன்னருஞ்சீர்
வெண்காட்டு மத்த மிலைந்தோன் மலைதந்த
பெண்காட்டு மத்தபிரான். (௧௧)

### கீழைத்திருக்காட்டுப் பள்ளி

உருவன் றருவன் றருவருவென் றன்னத்
திருவுருவங் கொண்டருள்கூர் தேவை-மருணெஞ்சே
பாட்டுப்பள் ளிக்குளே பாலர் பயில்கீழைக்
காட்டுப்பள் ளிக்குளே காண். (௧௨)

### திருக்குருகாவூர் வெள்ளடை

அன்னமறி யாமுடியி லாற்றுணு வேற்றுவந்து
முன்னர்வன் றொண் டர்க்களித்தான் மூதூர்-துன்னங்
குருகாவூர் வெள்ளடையே கோயிலா னன்பர்க்
கருகாவூர் வெள்ளடையேற் றான். (௧௩)

### திருப்பிரமபுரம் ஆகிய சீர்காழி.

இப்பகலோ பிற்பகலோ வெப்பகலோ தீர்வுளது
முப்பகலு மோர்வார்க்கு முன்னறிதே—செப்புஞ்
சிரம புரமேற் றிருட்டியுளேன் காழிப்
பிரமபுர மேதக்கோய் பேண். (கச)

### திருக்கோலக்கா.

நற்றலம் போற்றுதிரு ஞானசம் பந்தருக்குப்
பொற்றாள நல்கு புரிநெஞ்சே—முற்றால
ஞாலக்கா வென்றே நபத்தருவோ டார்பொழில்சூழ்
கோலக்கா வென்றே குறி. (கரு)

### புள்ளிருக்கு வேளூர் ஆகிய வைத்தீசுரன் கோயில்.

கருமையுண் கண்ணாள் கருத்தறியீர் வாளா
திருமைகெட வெண்மகளீர் செவ்வி—யருமைதனை
யுள்ளிருக்கு வேளூறுக் கோர்மருந்தாம் வைத்தியனார்
புள்ளிருக்கு வேளூர்க்குப் போம். (கசா)

### திருக்கண்ணார் கோயில்.

அங்கண்மா ஞால மளிப்பவனுங் காப்பவனு
மெங்கண்மா தேவனென வேத்தியமர்—மங்கலிற்சி
ரேய்ந்ததிருக் கண்ணார்கோ யிற்பரனைச் சேவிப்பார்
வாய்ந்ததிருக் கண்ணார் மனத்து. (கஎ)

### திருக்கடைமுடி ஆகிய கீழூர்.

அன்னங் கொளவந்தே யன்னையே யென்கலன்கண்
முன்னங் கவர்ந்துபோ மூர்த்திகளே—பின்னஞ்[ளார்
சடைமுடியிற் கங்கையுளார் சாரொருபெண் ணுள்
கடைமுடியிற் கங்கையுளார் காண். (கஅ)

### திருநின்றியூர்.

கோடிக் கதிபருந்தங் கூட்டழிந்தார் கூற்றுவனுக்
கோடிப் பிழைத்தா ரொருவருமில்—கோடியமெய்
பொன்றியூ ரானெடுத்துப் போய்க்களத்திற் போடு
நின்றியூ ரானை நினை. [முன் (௧௯)

### திருப்புன்கூர்.

இந்தப் பிறவியிற்பே ரின்பநல்கு மோவலது
முந்தப் பிறவிதரு மோவறியேன்—விந்தப்
பொருப்புன்கூர் மத்தன் புகழுமைவா மத்தன்
திருப்புன்கூர் மத்தன் செயல். (௨0)

### திருநீடூர்.

உண்டுந் திரிந்து முறங்கியுநாட் போக்குவீர்
ஞெண்டுபூ சித்த நியமமுன்னீர்—மண்டுன்
திருநீடூர் சென்று சிவற்பரசி வாழ்வீர்
கருநீடூர் தீயுங் கரிந்து. (௨௧)

### திருஅன்னியூர்.

எய்து வகையறியே னெய்தினவர் பாலன்பு
செய்து மறியேன் றெளிதலெங்கன்—மொய்கரிமேன்
மன்னியூ ரையன் மகவான் றொழுதேத்து
மன்னியூ ரைய னருள். (௨௨)

### திருவேள்விக்குடி.

உற்றமனை மைந்த ரொருபாற் கலங்கிளையச்
சுற்ற மொருபாற் சுலவுவமே—லுற்றயர்ந்து
மாள்விக் குடியங்கவ் வாய்முடியா தேத்துநெஞ்சே
வேள்விக் குடியான்றாள் வேட்டு. (௨௩)

## எதிர்கொள்பாடி.

வஞ்சகமே யைவர் வயப்பட் டுழலாதே
நெஞ்சகமே மாலின்றி நேராப்போய்—மஞ்சிவர்சே
நல்லெதிர்கொள் பாடி நணுகுவரன் சன்னிதிதன்
னில்லெதிர்கொள் பாடி யிரு. (௨௪)

## திருமணஞ்சேரி.

பெறலருநற் றாயும் பிதாவும்போ திக்குந்
திறனுறுமா சானுமாஞ் செல்வ—னறவு
மருமணஞ் சேரியனுன் மாமலருய் யானத்
திருமணஞ் சேரியனுந் தே. (௨௫)

## திருக்குறுக்கைவீரட்டம்.

காவியற்பூங் காண்டமதற் காய்ந்தனையான் கற்புடைய
தேவிநனி வேண்டவருள் செய்தனன்முன்—மேவி
வெறுக்கை யுளாரெண் விசும்புளார் போற்றுங்
குறுக்கை யுளாரெண் குணன். (௨௬)

## திருக்கருப்பறியலூர்.

கரவுடைய வஞ்சக் கடையேற் கறிவைக்
குரவற் கொடுத்தான் கூர்சீர்ப்—பரவை
விருப்பறிய வூரன் விடுதூதன் றாய
கருப்பறிய லூரன் கனிந்து. (௨௭)

## குரக்குக்கா.

பூத்தொழும்பர் போனடிக்கும் போலி யடியனையு
மேத்துமன்பர் தம்மை யெழுதிடுங்கைச்—சாத்திற்
றரக்குக்கா லன்ன தயங்குகுலை வாழைக்
குரக்குக்கா மன்ன குறி. (௨௮)

அஞ்சினுக் குட்புறம்பா ளூரூறுக் கப்புறத்தா
னெஞ்சினுக்கு கந்தல நீடுவினைச்—சஞ்சிதக்கோர்
வெல்வாள் கொளிபுத்தூர் மாமதிசேர் மாடமலி
யெல்வாள் கொளிபுத்தூ ரீது. (உக)

திருமண்ணிப்படிக்கரை.

முடைப்படைய வல்லவுணர் முப்புரஞ்செற் றூவ
மடைப்பள்ளி காவலாய் மன்னி—யிடைப்பொலியு
மண்ணிப் படிக்கரையாம் வத்திரம்போ லார்க்குமிய
மண்ணிப் படிக்கரையான் வண்டு. (௩0)

திருஓமாம்புலியூர்.

பொன்வேண் டினுமாப் பொருள்வேண் டினும்விழைவ
வென்வேண் டினுமளிப்ப ரேழைநெஞ்சே—முன்
வலியூ ரரவம் வணங்குமெழி லோமாம் [போய்
புலியூ ரரவர்ப் புகழ். (௩க)

கானாட்டுமுள்ளூர்.

தாவரத்துஞ் சங்கமத்துந் தன்னமுநீங் காமலே
பூவின் மணம்போற் பொலிந்திருக்குந்—தேவனுன்
மானாட்டு முள்ளூர் வதியான் வதிந்தருள்வான் [னூர்
கானாட்டு முள்ளூர கம். (௩உ)

திருநாரையூர்.

பொன்னையன்றிப் பூணுண்டோபுண்ணியனேவுலகேதேபோ
லுன்னையன்றி நாயேற் குறுவதுண்டோ—மின்னகழி
மன்னாரை யூரரா வான்மதியி னீழலெக்காய்
தென்னாரை யூரரா செப்பு. (௩௩)

9317



## கடம்பூர்.

கண்டாளோ வன்றேமின் காணு ளணிவளைமால்
கொண்டா ளுணவாதி கொள்ளாள்கா—விண்டாவு
மங்கடம் பூரணனை யாயிழைபான் மேயவனை
யெங்கடம் பூரணனை யென்று. (௩௪)

## ப

போராத வல்வினைகள் பேர்ந்தோடு நெஞ்சமே
வாராத செல்வம் வலிந்துவருஞ்—சீராரும்
பந்தணை நல்லூர்ப் பரன்கோ யிலைவலநீ
வந்தணை நல்லூர் வரும். (௩௫)

## கஞ்சனூர்.

எண்புவிநீர் தீவளிவா னென்றுந் தியமான
னண்படிவங் கொள்பரனை நன்னெஞ்சே--திண்புயனுங்
கஞ்சனூ ரானைக் கவின்கொம் பொசித்தவனுன்
கஞ்சனூ ரானைக் கருது. (௩௬)

வனசரன் மாவாதி வாலறிவில் பற்பல
சனன மெடுத்துத் தளரேன்—மனனே
திருக்கோடி காமருவுந் தேவாதி தேவ
னுருக்கோடி காமருதா னூன். (௩௭)

## திருமங்கலக்குடி.

உந்தித் தடமலர்வண் டோர்வரிதா யோகியர்தம்
புந்தித் தடமலர்நற் பூங்கழலைச்—சிந்தித்
திருமங் கலக்குடிவாழ் வெண்ணனெஞ்சே வீடாந்
திருமங் கலக்குடிவாழ் தே. (௩௮)

### திருப்பனந்தாள்.

குலவிருவ ரன்பிற் குனிந்து நிமிர்ந்து
நிலவு திருவுருவை நெஞ்சே—நலமுறக்கா
ணைய திருப்பனந்தா ளூரும் வயல்புடைசூழ்
செய்ய திருபனந்தாள் சென்று. (௩௯)

### திருவாப்பாடி.

சம்பந்தர்க் காயிரஞ்சீர் சால்பரவை சங்கிலியாம்
வெம்பந்தர்க் கெண்ணிலவீ வித்தகதி—கம்பரனே
பாப்பாடி யானும் பரசினே னீயுமொன்றென்
காப்பாடி யானே யருள். (௪௦)

### திருச்சேய்ஞலூர்.

தந்தையிருந் தாடடிந்து தண்டியருள் பெற்றதூஉஞ்
சிந்தையுறு செவ்வேள்பூ சித்ததூஉ—மைந்து
தருச்சேய்ஞ லூரர் தரிசிப்ப தூஉங்கோன்
றிருச்சேய்ஞ லூரதாந் தேம். (௪௧)

### திருந்துதேவன்குடி.

சாத்திரநூ லாராய்ச்சி தான்வேண் டுவதில்லை
தோத்திரமே செய்து தொழுதுபோய்ச்—சீர்த்திகனி
மண்டு திருந்துதே வன்குடியார்க் கன்பர்தமைக்
கண்டு திருந்துநெஞ்சே காண். (௪௨)

### திருவியலூர்.

மனமொழிமெய் மூன்றும் வணங்கித் துதிசெய்
துனமின் வயமா வுறச்செய்—கனமே
மருவியலூ ரத்த மதிதவழு மாடத்
திருவியலூ ரத்த சிவ. (௪௩)

## கோட்டையூர்.

வன்னிமத்தங் கொன்றை மதிசூடி மன்றாடிக் [பொய்
கன்னியத்த வென்னக் கனிந்துதுதி — பன்னிமெய்
மேயகோட்டை யூரார் வினைவினையு முன்னெஞ்சே
தூயகோட்டை யூராற் றொழு. (சச)

## திருவின்னம்பர்.

வைக்குடில்கால் கைசாயின்மற்றவைகொண்டாகுவரிப்
பொய்க்குடிலற் றுயிற் புதுக்குவரார்—மெய்க்குடிலை
யுன்னம்ப ரானே றுகந்தேறும் பெம்மானை
யின்னம்ப ரானை யியம்பு. (சரு)

## திருப்புறம்பயம்.

மாலைப் பரமெனவே மாலா யுலையனெஞ்சே
வேலைப் பொருகணுமை மேவரனைச்—சோலைப்
புறம்பயமின் றேன்பாய்ந்து பொன்விளைக்கும் பண்
புறம்பயமின் றேவனையே போற்று. [ணைப் (சசு)

## திருவிசயமங்கை.

ஏண்முப் பகையு மெளிதுவெல்ல லாமனையான் [முப்
றூண்மலரி னுண்மலர்தூய்ச் சாற்றுநெஞ்சே—கோண்
புரவிசய மங்கைப் பொருவிலின்றிக் கொண்டான்
வரவிசய மங்கை வரன். (சஎ)

## திருவைகாவூர்.

ஆன கவலை யனைத்தும்போய் மேலாய
ஞான நிலைபெறுவாய் நன்னெஞ்சே—மானமின்றி
வைகாவூர் மாமதியை மஞ்சுமறை தூயதிரு
வைகாவூர் மாமதியை வாழ்த்து. (சஅ)

### வடகுரங்காடுதுறை.

அதுவே யருச்சனையா மன்பார்ந் தகனே
மதுவேய் மலர்த்தொடையல் வாடு--முதுவேண்டாம்
பாடு துறையார் பலதார் வடகுரங்
காடு துறையாற் கணி. (சகூ)

### திருப்பழனம்.

இருமாப் பிறவி யெனுங்கடலி னுள்ளீ
ரொருமாப் பொருடிறைஞ்சி யொப்பில்—பெருமான்
றருப்பழனஞ் சாருந் தனிநறவம் பாய்செய்த்
திருப்பழனஞ் சாருந் தெளிந்து. (ருo)

ஆரைம் புலவேட ராறலைக்கா தைந்தெழுத்தைப்
போர நினைந்துதொண்டர் போயடைதீர்—நேரதா
மையாறு றுறையா றுந்தத்து வங்கடந்தோ
னையாறு றுங்கதிக்கே யாங்கு. (ருக)

### திருநெய்த்தானம்.

பொய்த்தான வாழ்வைப் புரிந்தயரே லீட்டிவைத்த
கைத்தான வெல்லாங் கடைவரா—மைத்தான
மெய்த்தானத் தானை வெருவவுரித் தானைநெஞ்சே
நெய்த்தானத் தானை நினை. (ருஉ)

### பெரும்புலியூர்.

பாதி யுருமகடேஉம் பாதியுரு வாடேஉமாச்
சோதியுரு வொன்றுதனிற் றோற்றினன்றே—ராதித்
தரும்புலியூர் தந்துபடர் தண்பொதும்பர் சூழும்
பெரும்புலியூர் நந்தம் பிரான். (ருங)

## திருமழபாடி.

என்றன் றுதிகேட் டெனக்கருணீ செய்வதெங்கள்
மன்றனறுங் கொன்றையந்தார் வள்ளன்மா—றுன்ற
பாத திருமழ பாடியன்பின் பூங்கையிற்றுய்க் [றும்பொற்
காத திருமழமான் கன்று. (௫௪)

## திருப்பழுவூர்.

பிறவிக் கடல்கடந்து பேரின்ப வெள்ளத்
துறவுத் தருளு முளமே—செறுவிற்
கொழுவு ரலவழிவெண் கோடுழுஉஞ் செய்ய
பழுவு ரரனற்றாள் பற்று. (௫௫)

## திருக்கானூர்.

வாரிதிமண் ணுண்டளக்கு மார்பினுமோர் கொம்புளதக்
கூரியற்கொம் பாலரக்கர்க் கொன்றகன்மா—பாரின்
மருக்கானூர் தெய்வதமா வாழ்க்தமன்னு நந்தந்
திருக்கானூ ருத்தமனார் சே. (௫௬)

துன்பக் கடலிற் சுழலுநண்பீ ரொப்புயர்வில்
லின்பதவி யேபெறலா மெய்யரும்பி—யின்பத்
தழுமன்பி லால மவிர்களத்தாற் போற்றித்
தொழுமன்பி லாலந் துறை. (௫௭)

## திருமாந்துறை.

நல்கும் விரும்புவன நன்னெஞ்சே பேரின்ப
மல்குங் கதியும் வழங்குமால்—செல்வத்
திறுமாந் துறைவா ரிடன்செலேல் சீர்த்தி
பெறுமாந் துறைவாழ் பிரான். (௫௮)

## திருப்பாற்றுறை.

சோற்றுத் துறையுஞ் சுகமுறுநெய்த் தானமும்பொன்
னேற்றவெற்பு நிற்கிருப்ப வேற்பதென்கொல்-போற்றுவனை
மேற்றுறை யானே றிவர்ந்தருளுங் கோமானே
பாற்றுறை யானே பகர். (ருகூ)

## திருவானைக்கா.

இம்மா னிடப்பிறவி யெய்தரிது நெஞ்சமே
யம்மா னிடத்தமரு மம்மானைக்—கம்மாந்
திருவானைக் காவானைத் தீங்குளோர் தம்மை
மருவானைக் காவானை வாழ்த்து. (கூo)

## திருப்பைஞ்ஞீலி.

மாலயன்முற் றேவரெலா மாண்டுபிறக் கின்றமையா
லேல வவர்தமக்கஃ தெய்துமோ—சேலவிர்கண்
மைஞ்ஞீலி யானோர் வயிற்பாலி மேயதிருப்
பைஞ்ஞீலி யானே பரம். (கூக)

## திருப்பாச்சிலாச்சிராமம்.

குவிகைய ராயன்பு கூர்ந்து துதிப்பீர்
புவிகைய ராய்வான் புரப்பீர்—கவிகை
பொருப்பாச்சி லாச்சிரமம் போக்கரிபோற் றீசன்
றிருப்பாச்சி லாச்சிராமஞ் சென்று. (கூஉ)

## ஈங்கோய்மலை.

சென்று திரிந்துழலென் சித்தமெனுஞ் தீச்சுரும்பை
யுன்றனடித் தாமரைக்க ணுய்த்தருள்வாய்—குன்றமி
பாங்கோய் மலையில் பரஞ்சோதி வான்றொடுசீ [ணோர்
ரீங்கோய் மலையா யினிது. (கூங)

## காவேரிக்குத் தென்கரையில் உள்ள ஸ்தலங்கள்.

### வாட்போக்கி ஆகிய இரத்தினகிரி.

முன்பான் மூலைச்சுவடு மோலிமேல் வாட்டழும்பு
பின்பாற் பிரம்புவடுப் பெற்றவனை—யன்பார்ந்த
வாட்போக்கி யானைநன்கு வாழ்த்தாம லேவாளா
நாட்போக்கி யானைகின்ற னன். (க)

### கடம்பந்துறை.

கண்ணிடந்து பூசித்தார் கண்ணரொடு திண்ணருமே
யெண்ணிடந்த வன்பி லெவர்பெரியர்—மண்ணி
லடம்பந் துறையா ரவிர்நளின வாவிக்
கடம்பந் துறையாய் கழறு. (உ)

### திருப்பராய்த்துறை.

பண்ணியபா பந்தழன்முன் பஞ்சாந் திருமேனி
புண்ணியமே யாயவனைப் போற்றுதிரைந்—தெண்ணி
திருப்பராய்த் துறைக்கு மிளிரனமோர் காட்டுந்
திருப்பராய்த் துறைக்குளே சென்று. (ங)

### கற்குடி.

மாலு மயனு மகவானு மற்றவருஞ்
சாலு முயிரனைத்துஞ் சாதறிண்ணஞ் — சேலுகன்
கற்குடி யானே கடிய வரும்விடத்தை [செய்க்
முற்குடி யானேன் முனிந்து. (ச)

### மூக்கீச்சரம் ஆகிய உறையூர்.

கஞ்சமலர்ச் செங்கையெழிற் காந்திமதி யம்மையொடு
பஞ்சவர்ண நாதர் பயில்பதிகாத்—துஞ்சிமிசைப்
போங்கொண்மூக் கீச்சரவப் புள்ளிரியப் பெய்நறைநீர்
தேங்கொண்மூக் கீச்சரமாந் தேம். (ரு)

### திருச்சிராப்பள்ளி.

துதிப்பவர்தாந் தொல்வினைபோய்த் துன்பகன்று மேலாய்
விதிப்பவன்கை வீப்பவன்கை மேவார்—சுதிப்பா
ரராப்பள்ளி யானை யடிமைகொண் டாளுஞ்
சிராப்பள்ளி யானைத் தினம். (௬)

### திருவெறும்பியூர்.

பூதலத்தில் வந்துதித்துப் புண்ணியங்கள் செய்ததன்மேன்
மீதலத்தோர் வீடுபெறல் வேண்டுமோ—லாதலின்வால்
வன்ன வெறும்பியூர் வாழ்வைவெஃகேன் வேட்பணித்தன்
மன்ன வெறும்பியூர் வாழ்வு. (௭)

### திருநெடுங்களம்.

நிலையா தனவற்றை நித்தியமென் றெண்ணி
யலையா வுலையு மகனே—மலையா
வடுங்களத் தானை யதண்மெயிற்போர்த் தானை
நெடுங்களத் தானை நினை. (௮)

### மேலைக்காட்டுப்பள்ளி.

ஏற்றில் வரவவற்கண் டீர்வளை தான் பூண்கலன்போய்
வேற்றுருவ மாகிநின்றாள் வேற்றியாள்—சாற்றுவதென்
சேலைக்காட் டும்பிணைக்கட் சேயிழையோர் கூறுடைய
மேலைக்காட் டுப்பள்ளி வேந்து. (௯)

### ஆலம்பொழில்.

இன்னல்வந் தெய்திடினு மின்பம்வந் தெய்திடினு
நின்னடியி லென்னன்பு நீங்காமே—பன்னரிய
மேலம் பொழிலார் வியந்தேத்துஞ் செய்யதிரு
வாலம் பொழிலா யருள். (௧0)

## திருப்பூந்துருத்தி.

கருவரைபோற் காலன் கடாவைக் கடாவி
யிருபிறைபோற் றந்த மிலங்க—வருபுவிழி
சேந்துருத்தி யானை சிரமத்து வந்தளிப்பாய்
பூந்துருத்தி யானே புரிந்து. (கக)

## திருக்கண்டியூர் வீரட்டம்.

முன்னகமுற் றெள்ளுமயன் மொய்சிரத்தி லொன்றைமலர்க்
கைகந்நகத்தி ளுலே கடிந்தவனு—மன்னகங்கொண்
டிண்டியூ ருற்றே யுகந்தெடுத்த செல்வனுஞ்சீர்க்
கண்டியூ ருத்தமனே காண். (கஉ)

## சோற்றுத்துறை.

அல்லே யமணர்கல்யாத் தன்பரைமுந் நீர்தளவக்
கல்லே புணையாக் கரையேற்ற—வல்லோயே
சோற்றுத் துறையாய் துயர்ச்சுழியு ளூற்றுழல்வேற்
காற்றுத் துறையாங் கருள். (கங)

## திருவேதிகுடி.

முக்காண் முனிவன் முயறவத்தை முன்னிட்டே-
யக்காலத் தாந்தவத்தா மாரருள்கொண்—மைக்கார்மெல்
லோதி குடியா மொருபாக வாண்டருள்வாய்
வேதி குடியாய் விழைந்து. (கச)

## தென்குடித்திட்டை.

நான்புகழ்ந்தே பாடுவே னன்மணமின் மத்தமொடு
தேன்பிலிற்றுங் கொன்றையணி தேவிழையும்—வான்புலவ
ரென்குடித்திட் டைய விவன்பிதற்றி னெனினுந்
தென்குடித்திட் டையன்றன் சீர். (கரு)

## திருப்புள்ளமங்கை.

துதிக்கவலங் கூற்றென் றுணைவெள் ளெயிறு
மதிக்கலைபோல் வாற்குமஞ்சேரம் வாழ்வு—கதிக்குந்
திருப்புள்ள மங்கையான் செய்ய திருத்தாள்
விருப்புள்ள மங்கைகு வித்து. (கசு)

## சக்கரப்பள்ளி.

யானென தென்னு மிருவகைப்பற் றற்றவர்க்கே
மோனநிலை காட்டுவான் முன்னெஞ்சே—நீனஞ்ச
வெஞ்சக் கரப்பள்ளி விண்டுதொழு தேத்துபொழி
லஞ்சக் கரப்பள்ளி யான். (கஎ)

## திருக்கருகாவூர்.

இம்மைப் புறத்தைவ ரென்பார் செருக்ககற்றி
யம்மைப் பயனு மளித்தாள்வான்—மும்மைத்
தருக்கரு காவூர் தனைச்செற்ற பெம்மான்
திருக்கரு காவூர்ச் சிவன். (கஅ)

## திருப்பாலைத்துறை.

புலனைந்துஞ் சோர்ந்து பொறிமயங்கு முன்ன
நலனுகரு மன்பர்குழா நண்ணி—நிலவுதிருப்
பாலைத் துறைமேவு பண்ணவன்றாள் சார்திர்சன்ம
வேலைத் துறைமேவு வீர். (கசு)

## திருநல்லூர்.

அந்தையுறு மாற்கரிது மப்பாக் கெளிதுநல்லோர்
சிந்தைக் கினியதுமாய்ச் சீர்த்தநெஞ்சே—முந்தை
நெடுநல்லூர் மேவினன்கோ னீங்கினனென் றுமுன்
திருநல்லூர் மேவினன்றாள் சேர். (உ0)

### திருவாவூர்ப் பசுபதீச்சரம்.

பொன்மையுறு மேனிப் புனிதன் பெருங்கருணைத்
தன்மைபுணா ராமற் றளருநெஞ்சே—நன்மைசெயற்
பாற்றூய வாவூர்ப் பசுபதீச்ச ரத்தன்றாள்
சாற்றூய வாவூர் தரும். (உக)

### திருச்சத்திமுற்றம்.

நினைபபவர்த நெஞ்சே நிலயமாக் கொண்டு
வினைப்பந்த நீக்கி மினி நுந்—சனிப்பறவே
பத்திமுற் றன்பர் பரசவருண் முக்கண்ணன்
சத்திமுற் றன்பன் சரண். (உஉ)

### திருப்பட்டீச்சரம்.

பசுமேய்த்த வாயன் பசுவாயின் மற்றோர்
பசுவே யெனற்கையப் பாடில்—பசுங்கிளிமா
கட்டீச் சரத்தான் கனின்வில் லுயர்பணைசூழ்
பட்டீச் சரத்தான் பதி. (உ௩)

### திருப்பழையாறை வடதளி.

பரிதிதந்தா னர்ச்சுனர்க்குப் பாசுபதந் தந்தான்
கருதினார்க்குத் தந்த கணக்கில்—கருதுநெஞ்சே
மன்பழை யாறை வடதளியா னன்றுமைகம்மா
வன்பழை யாறை யரிக்கு. (உச)

### திருவலஞ்சுழி.

அன்பளவிட் டன்ப ரவரவர்க்குத் தக்கபடி [நீர்
யின்ப மினிதளிக்கு மெண்குணத்தான்—முன்பவெந்
பாய வலஞ்சுழியான் பாங்குறக்கை தந்தளிப்பான்
மேய வலஞ்சுழியான் வேட்டு. (உரு)

## குடமூக்கு ஆகிய கும்பகோணம்.

மாதனத்திற் றேன்மொழியின் மான்விழியிற் கானடையிற்
காத றனைவிளைக்குங் கள்ளவுள்ள—மாத
ரிடமூக் கமரு மிழுதையனைக் காவாய்
குடமூக் கமருமருட் கோ. (உசு)

## திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்.

மாலயனுந் தேடமறை வாய்நின்றான் யாரென்னிற்
கோலமணி யாரமகில் கொண்டுந்திக்-கூலமேற் [தைக்
காழ்க்கோட்ட மன்னவெறி காவிரிசூழ் சீர்க்குடந்
கீழ்க்கோட்ட மன்னனுமை கேள். (உஎ)

## திருக்குடந்தைக் காரோணம்.

சிறப்புறுமிம் மானிடமா சென்மங் கெடினெப்
பிறப்புறுமோ நெஞ்சே பிறங்கு—சிறப்பூ
மடந்தைக்கா ரோணத்தன் வாழ்த்தும் பிரானுங்
குடந்தைக்கா ரோணத்தற் கூறு. (உஅ)

## திருநாகேச்சுரம்.

பைபரவம் பூண்ட பரம னருள்வடிவாஞ்
சையமுலை மாதொடும்வாழ் தானமாஞ்—செய்யதிற்
பாயதிரு நாகேர்ப் பகடுகைக்கு மார்புமிகுஞ் [சேர
தூயதிரு நாகேச் சுரம். (உகூ)

## திருவிடைமருதூர்.

வரகுணன்முன் னெண்ணில் வழுத்துமன்பர் வேட்ட
வரமளித்தான் ருள்சார் மனனே—புரலி
னிடைமருதூ ராய னிறைஞ்சுமகா தேவ
னிடைமருதூ ராய விறை. (௩௦)

## தென்றூங்காடுதுறை.

பவநாடி யெண்ணிலசெய் பாழ்நெஞ்சே மேலாய்க்
கவநாடி தாழுமுன்றாழ் காமர்—தவநாடிக்
காடுதுறை யண்ணல் கறைமிடற்றோன் றென்குரங்
காடுதுறை யண்ண லடி. (ருக)

## திருநீலக்குடி.

வழிபட் டருள்பெற்ற மாண்பினரெண் ணில்ல
ரிழிபட்ட செந்துவுமெண் ணில்லு—கழிநெஞ்சே
நீலக் குடியமரு நின்மலனை யோதரிய
மூலக் குடிலையனை முன். (ருஉ)

## வைகன்மாடக்கோயில்.

நன்காடுங் கோயிலா நண்ணிமெய்யி னீறணிந்து
நன்காடு நம்பன்வாழ் நற்றலமா—மின்காண்
மயில்வைகன் மாட மலிந்தோங்க வோங்கு
மெயில்வைகன் மாடக்கோ யில். (ருரு)

## திருநல்லம்.

கண்டவின்ப மேதினமுங் காழுற் றுழனண்பீர்
தண்டதரன் பாசமொடு சாருமுனர்—கொண்டந்
திருநல்ல வானகமா தேவற் றொழுமின்
வருநல்ல வானகமாம் வாழ்வு. (ருச)

## திருக்கோழம்பம்.

என்னபணி செய்திடினு மென்னநினை வுற்றிடினு
மென்னவிட ரெய்திடினு மேழைநெஞ்சே--யுன்னமது
வேழம்ப மானவன்மெய் மேவுயிர்மேற் பற்றுறல்போற்
கோழம்ப மானவன்மேற் கொள். (ருரு)

## திருவாவடுதுறை.

சிவயோ கியர்க்குச் சிறந்த தளியா
நவகோடி சித்தபுர நாமத்—தெவர்க்கு
மருவா வடுதுறையாம் வன்பிறவிக் கீசன்
திருவா வடுதுறையாந் தேம். (௩௬)

## திருத்துருத்தி ஆகிய குற்றாலம்.

கானகத்து மாற்றின் கரையகத்தும் வெம்புலிவாழ்
கோநகத்து மேவியே கொல்பணிசெய்—வானகத்து
மன்னுந் துருத்தியைப்போல் வாயுவைக்கும் பித்துழல்வீ
ருன்னுந் துருத்தியை யுள். (௩௭)

## திருவழுந்தூர்.

ஏணா ரரியயனா மேன வெகினமாய்ச்
சேணார் சுடருருவைத் தேடியுமே—காணாமற்
சாலவழுந் தூரத்தன் றாபதர்கட் கண்மையனாங்
கோலவழுந் தூரத்தன் கோ (௩௮)

## திருமயிலாடுதுறை ஆகிய மாயூரம்.

எந்தையாற் கண்டனுக்க லேவரிதேர் பூமனைவி
தந்திடையாஞ் சத்தி தனயரெழி—லேந்துகரன்
மின்னுமயி லாடு மிளிர்படையூர் திக்குகனார்
துன்னுமயி லாடு துறை. (௩௯)

## திருவிளநகர்.

ஓரதிகை கோவல்கண்டி யூர்குறுக்கை மாவழுவூர்
கூர்பறிய லூர்விற் குடிகடவூர்—வீரட்ட
மன்ன விளநகரார் வாழ்வுமுள ரன்பருளத்
துன்ன விளநகரார் வுற்று. (௪௦)

## திருப்பறியலூர் வீரட்டம்.

இவ்வடிவ னிவ்வண்ண னிவ்வூர னென்னநெஞ்சே
யுவ்வண்ணற் கோதிடவொண் ணாதெனினு—செல்வ
னுருப்பறிய லூரால முண்டகள நீலந்
திருப்பறிய லூரரந் தெளி. (சக)

## திருச்செம்பொன் பள்ளி.

இரப்பவனென் றாலுமன்பர்க் கிருவனெஞ் சேநீர்
கரப்பவனென் றாலுங் காவா—னுரப்பணிமாக்
கொன்பள்ளி யானைக் குதூகலித்தூர் வானைச்செம்
பொன்பள்ளி யானைப் புகழ். (சஉ)

## திருநனிபள்ளி.

காலனெனத் தீயென்னக் காய்ந்து வருவதுகண்
டோலமிட் டும்ப ருலையும்போ—தால
முனிபள்ளி யார்ந்தான் முதல்வனென வென்னி
னனிபள்ளி யார்ந்தா னயந்து. (சங)

## திருவலம்புரம்.

பூங்கமல மேயவனும் பூவைநிற மாயவனுந் [மேல்
தாங்கணோர் வேண்டினுந் தண்டமிழ்ப்பா—வாங்கவர்
வெய்ய வலம்புரத்தில் விட்டொறுக்கி னும்பகரே
னைய வலம்புரத்தற் கன்று. (சச)

## தலைச்சங்காடு.

பற்றிலரற் பூசனைமால் பண்ணி யிதற்குநிகர்
மற்றிலென்சீர் வால்வளைகொண் மாபதியாஞ்—சிற்றில்
கலைச்சங்கா டாயக் கவின்மகளிர் மேவுந்
தலைச்சங்கா டாய தலம். (சரு)

### திருவாக்கூர்த்தான்தோன்றி மாடம்.

என்னையிம் மெய்யகத்தில் யானறியே னெங்குமா
முன்னையெவ் வாறறிவே னேதுவாய்-மின்னுகுழைச்
சங்க திருவாக்கூர்த் தான்றோன்றி மாடகண்டேச்
செங்கதிரு வாக்கூர் சிவ. (சசு)

### திருக்கடவூர் வீரட்டம்.

காமர் திருத்தாள் கருத்துள்வைப்பாய் நெஞ்சமே
மாமுனிவன் மைந்தனுயிர் வௌவவந்த—வேமற்
செருக்கடவூர் மேதியுமே சிந்தவுதை தந்த
திருக்கடவூர் மேய சிவன். (சஎ)

### திருக்கடவூர் மயானம்.

மாய வுலகுதனின் மாழ்கிக் கிடக்குநெஞ்சே
யாயபுல னைந்து மடங்கியே—காயந்
தடவூர் மயானத்திற் றன்கொண்டு போமுன்
கடவூர் மயானத்தற் காண். (சஅ)

### திருவேட்டக்குடி.

மயன்மனமே நல்கும் வணங்கித் துதிப்பாய்
வியன்றெறுழிலி னுமகந்தை மேய—வயன்சிரங்கொள்
கூனகத்தான் வேட்டக் குடியகத்தான் கைலையெனும்
வானகத்தான் வேட்ட வரம். (சகூ)

### திருத்தெளிச்சேரி.

கருவகையை யாக்குங் கழிநசைநீத் தைந்தை
யொருவகையி னுக்கி யுரைசெ—யிருவகைய
பற்றெளிச் சேரியலைப் பற்றி மடநெஞ்சே
நற்றெளிச் சேரியனை நாடு. (ரு0)

## தருமபுரம்.

பிறக்குங்கா லின்னல் பெரிததனின் மேலா
மிறக்குங்கா லின்னலினின் றென்னைச்—சிறக்குந்
தருமபுரந்தான் றனித்தலமாக் கொள்ளெம்
பெருமபுரந்தாள் பெரிது. (ருக)

## திருநள்ளாறு.

சென்மமுட னட்டமமுற் றீயவிடஞ் சேர்ந்திடினு
நன்மையே செய்வா னவின்மந்தன்—மன்மனனே
நள்ளாற்றி னம்பிதனி னண்மதியார் கங்கைமுடி
நள்ளாற்றி னம்பிதனை நாடு (ருஉ)

## கோட்டாறு.

காணற் கரியநினைக் காணவிட நல்காமன்
மாணத் திரையின் மறைவுசெயு—மாணவமே
யென்றிருக்கோட் டாற்ற லிலேனருள்வாய் பொன்னகப்பா
மன்றிருக்கோட் டாற்ற வர. (ருங)

## திருவம்பர்ப் பெருந்திருக்கோயில்.

ஐந்துடனே யைந்தா மவத்தை யவைமுறையுற்
றைந்து பொறிவா யமர்புலன்க—ளைந்து
மொருங்கோயி னாயனையே யுய்வகையி லம்பர்ப்
பெருங்கோயி னாயகனே பேண். (ருச)

## திருவம்பர் மாகாளம்.

அந்தணன்பூ மன்வணிக னுளாதி யாயதன்றி
நிந்தையுறு நீசனுமாய் நின்றருள்வா—னந்தரிமுன்
னும்பர்மா காளத் துலைதரும்போ தாண்டருள்செ
யம்பர்மா காளத் தரன். (ருரு)

## மீயச்சூர்.

உன்செயலின் றேரணுவு முற்றசையா தென்னிலிங்க
னென்செயலின் யாதா யினுமுண்டோ—கொன்செயலின்
மாயச்சூ ரத்த வடிவேலே வெந்தைதந்தை
மீயச்சூ ரத்த விளம்பு. (௫௬)

## மீயச்சூரிளங்கோயில்.

பொன்னரங்கக் கோயிலனும் புண்டரிகக் கோயிலனு
முன்னரங்கந் தாழ்ந்தேத்து மூதூரா—மின்னரங்க
விண்மீயச சூரியன்வா விசசெலுங்கா வான்பொழிலென்
றெண்மீயச் சூரிளங்கோ யில். (௫௭)

## திலதைப்பதி.

மண்ணாதி பூதமைந்தின் மன்சத்த மாதியைந்தும்
விண்ணாதி யொன்றுமுறை மேவிநிற்ப—ரெண்ணார்
நலதைப் பதியார் நவையுளத்திற் சாரார்
திலதைப் பதியார் செறிந்து. (௫௮)

## திருப்பாம்புரம்.

கல்லானை நாலேட்டைக் கற்படியின் மேல்வைக்கக்
கல்லானை யிக்கருந்தக் கண்டருளு—மெல்லா
ருருப்பாம் புரத்தா ரொளிர்சூலக் கையார்
திருப்பாம் புரத்தார் திருக்கு. (௫௯)

## சிறுகுடி.

ஒருங்குடியா னஞ்செ யுரவோர் குடியைப்
பெருங்குடியா வாழ்விக்கும் பெம்மா—னொருங்கு
மறுகுடி யாகர் வழங்குமணி மாடச்
சிறுகுடி யாளர் சிறந்து. (௬0)

## திருவீழிமிழலை.

வாழிமட நெஞ்சமே வான்பொருளொ லாமளிக்குங்
காழியர்க்கு மப்பருக்குங் காசுநத்தற்—காழியருண்
மென்றருவாய் வீழி மிழலையனைப் போற்றுவாய்
தென்றருவாய் வீழித் திரு. (௬௧)

## வன்னியூர்.

கொன்றைதனை நாடியிம்மின் கொங்கைமிசை வம்தணிந்
கொன்றை யிலங்குசுணங் குற்றயர்வா—ணன்றதனை [தாங்
வன்னியூ ரத்த மணியரவம பூண்டவசிர்
வன்னியூ ரத்த வழங்கு. (௬௨)

## கருவிலி.

ஆயி னவனிநீ ரங்கிவ்ளி யந்தரமே
யாயினவ ஞரணமேத் தத்தனினி—யாயின்
கருவிலியா னைந்து கலங்கா தருள்வான்
கருவிலியா னைந்தக் கரன். (௬௩)

## பேணு பெருந்துறை.

செஞ்சடையே கான்வரநீர் செல்லா றதிலுலவு
மஞ்சந் திரனம்பி யாம்வன்பர்—நெஞ்சத்
திருந்துறையா னந்த னினிதேத்தும் பேணு
பெருந்துறையா னந்தம் பிரான். (௬௪)

## நறையூர்ச் சித்தீச்சரம்.

எச்சமயத் தாரு மிறையெனநிற் கின்றவனு
மச்சமயர் தீதனுமே யாங்கடவு—ணிச்சயமா
முத்தீச் சரத முனிவர்களோம் போர்நறையூர்ச்
சித்தீச் சரமன் சிவன். (௬௫)

### அரிசிற் கரைப்புத்தூர்.

மூன்று கரமலரின் முத்தொழிலு மற்றிரண்டுங்
கான்றான் கழன்மலரிற் காட்டுவன்வண் — டென்று
வரைப்புத்தூர் முத்திவரும் வண்செய் யரிசிற்
கரைப்புத்தூர் முத்திவரன் சாண். (௬௬)

### சிவபுரம்.

முன்செய் வினையினினை முன்னா தினைகின்றே
னென்செய்கே னேழை யிரங்கியருண் — மின்செய்
சிவபுர மன்ன சிவபுரம்வாழ் செல்வ
பவபுர மன்னற் பர. (௬௭)

### கலயநல்லூர்

உடலமுறு மைவ ருலைந்தொடுங்கு முன்ன
ரடலமர்நெஞ் சேவெற் படக்கிக் — கடலருந்த
வல்ல கலய வரமுனிவிண் ணோர்தொழுந்தே
நல்ல கலயநல்லூர் நாடு. (௬௮)

### கருக்குடி.

செங்கரத்திற் றீப்பொறியுஞ் செஞ்சடையி னீர்த்துளியுந்
தங்கிருமா வூழி தனையாக்கும் — பொங்கு
செருக்குடி யானஞ் செயினுமவர்க் கண்ணான்
கருக்குடி யானங் கணன். (௬௯)

### திருவாஞ்சியம்.

அன்னமறி யாண்மா சடையுற்றான் சாரூபந்
தன்னையுற்றாள் சாயுச்சி யந்தந்தாள் - பொன்னனையாள்
காஞ்சியமன் னையங் கருதிடைமின் பாகதிரு
வாஞ்சியமன் னைய மகிழ்ந்து. (௭௦)

### திருநன்னிலத்துப் பெருங்கோயில்.

துதியேற் றடியார் துயர்தீர்த் துயர்வான்
கதியேற் றுவிக்குங் கருணை—நிதியேயாம்
பேணன் னிலத்துப் பெருங்கோயி லாற்றுதியே
னூணன் னிலத்துயர னுற்று. (௭௧)

### திருக்கொண்டீச்சுரம்.

சடையிலோ ரன்னந் தயங்க வயங்கும்
புடையிலோர் தோகை பொலிய—விடைநின்றுஞ்
செய்யதிருக் கொண்டீத் திகழ்கதிர்க ளாக்கொளிறை
துய்யதிருக் கொண்டீச் சுரன். (௭௨)

### திருப்பனையூர்.

அங்கை குவித்திறைஞ்சி யன்னவன்பே ராயிரமுஞ்
சங்கையற வோதீர் தருங்கதியே—கங்கை
விருப்பனை யூரானை வித்தானை யாருந்
திருப்பனை யூரானைத் தேர்ந்து. (௭௩)

### திருவிற்குடி வீரட்டம்.

கனியா மினியமொழிக் கன்னியொரு பாகன்
முனியா வரையைவளை முன்னோ—னினியான்
கருவிற் குடியாக் கவன்றுழலா தாள்வான்
றிருவிற் குடியார் சிவன். (௭௪)

### திருப்புகலூர்.

நாவலூர் நம்பிக்கு நல்கினன்பொ னற்புலவீர்
மாவரன்வேள் காமனென மானிடர்மேற்—பாவியற்ற
னிந்தைபுக லூர்செ னெடுமாட மேல்வைகு
மெந்தைபுக லூர்செல்கு வீர். (௭௫)

## திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்.

தோற்றமுற்ற வெல்லாந் தொலையுநெஞ்சே யிவ்வுடலைக் .
கூற்றமெதிர் பார்த்துக் கொடுபோமுன்-போற்றுருவி
லர்த்தமா னீச்சருய்ப்பூ வாவித் திருப்புகலூர்
வர்த்தமா னீச்சரனை வாழ்த்து. (௭௬)

## இராமனதீச்சரம்.

மாடமுறு செல்வமில்லாண் மைந்தர் நமன்வருங்கால்
கூட வருவதுண்டோ கொன்னிலத்தீர்—வீடருளு
மெந்தை யிராமன தீச்சரத்தாற் காளாவீ
ரந்தை யிராமனத்தீ ராய். (௭௭)

## திருப்பயற்றூர்.

மாநதமு நல்லனலேன் வாசிகமு மவ்வணமா
மானவொரு காயிகமு மற்றேறதீ—தான
வியற்றா ரரவனைய வெற்குமுய் வுண்டோ
பயற்றா ரரனே பகர். (௭௮)

## திருச்செங்காட்டங்குடி.

தாய்பிடிக்கத் தந்தையரிந் தன்பிற் சமைத்துவைத்த
சேய்தனையே யன்றழைத்த சித்தனூ—லாய்கவிஞர்க்
கஞ்செங்காட் டங்குடிலத் தாரவைத்தோன் முன்னிற்பா
னஞ்செங்காட் டங்குடியா னங்கு. (௭௯)

## திருமருகல்.

கன்னிதுயர் நீங்கிக் களிப்பெய்தச் சேய்மொழிக்கு
முன்னின் றருள்செய்த மூர்த்திநெஞ்சே—யுன்னித்
திருமருக ளுயகந்தன் சீர்த்தந்தை யெந்தை
திருமருக ளுயகன்பேர் செப்பு. (௮௦)

## திருச்சாத்தமங்கை.

என்ன செனன மெடுத்தோம்பாழ் நெஞ்சமே
யன்னதினு லாம்பே றடைந்திலம்பூ—மன்னற்
றுடைசாத்த மங்கைத் தொழும்பாற்றஞ் சீர்த்தி
யடைசாத்த மங்கை யரற்கு. (அக)

## நாகைக் காரோணம்.

பண்டரவே பாடிப் படாமணிபொன் ஞதிமூன்வன்
றெண்டர்பெற்றூர் நெஞ்சே துதியருள்வா—னண்டர்க்கு
முன்ஞகைக் காரோணன் முன்னித் தொழுதேத்துந்
தென்ஞகைக் காரோணன் சீர். (அஉ)

## சிக்கல்.

பேசிக் கலாம்விளைக்கும் பேதைமைவிட் டஞ்சடையில்
வாசிக் கலாமதியை வைத்தவன்வான்—பூசிக்கு
மாசிக்க லாமனனே வாழ்த்தி யனையவன்சீர்
வாசிக்க லாமனனே வா. (அ௩)

## கீழ்வேளூர்.

தூய்ய ருளத்திற் சுடரொளியாய் நின்றருள்வான்
வெய்ய ருளத்திலு மேவுவனே—மெய்யருவாய்
வாழ்வேளூர் வாச மலிவந் துலாமாடக்
கீழ்வேளூர் வாசன் கிளர்ந்து. (அச)

## தேவூர்.

சீற்றமெனும் வெம்புலியென் சிந்தையைவவ் வாதன்ன
தாற்ற றனையடக்கி யாளுவா—யேற்றசுவை
யான மருந்தே யருங்கனியே தேனேகா
வானமருந் தேவூர் வர. (அ௫)

### பள்ளியின் முக்கூடல்.

பொன்னார் திருவடியாம் புண்டரிகப் போதினையே
யுன்னாய் மனனேதன் னேடயன்மான்—மன்னாய்தப்
புள்ளியின்முக் கூடற் புணர்ப்பினன்வா னேங்குபொழிற்
பள்ளியின்முக் கூடற் பரன். (அ௬)

### திருவாரூர்.

புற்றிடங்கொள் பண்புணர்ந்தோ பொங்காவ மங்கமெலா
மற்றிடங்கொண் டேயுலவி வாழ்வதுதா-னற்றிடவோர்
மன்றிருவா ரூரன் மகிழ்வுறமுன் றாதுசென்றேய்
தென்றிருவா ரூரரசே செப்பு. (அஎ)

### திருவாரூரரநெறி.

திக்குவே றில்லை செனிப்பிறப்பி னாசல்போன்
மிக்குழலுந் தேவர்பான் மேவிலனு—மொக்குமெனைக்
காரூ ரரநெறியார் கட்சகிகேள் போற்றுதிரு
வாரூ ரரநெறியா யாள். (அஅ)

### திருவாரூர்ப்பரவையுண் மண்டளி.

கொம்பினின்று கொம்பினிற்பாய் கோடரம்போற் பூவிடய
வம்பினின்று வம்பினிற்சார் மானெஞ்சே—பம்பு
பரவையுண் மண்டளியார் பண்ணவனைத் தாரூர்ப்
பரவையுண் மண்டளியாற் பற்று. (அகூ)

### திருவிளமர்.

பதஞ்சலிம னேகரன்றன் பாரகத்தீர் போற்றீர்
நிதஞ்சலியா வின்புறுவீர் நீவி—ரிதஞ்செய்
களம ரணியோர் கடவொலியார் செய்சூழ்
விளம ரணியே விழைந்து. (கூ0)

## காவீரம்.

உற்றியா னுள்ளத்தி னுள்ளும்போ தொள்ளொளியாய்
நிற்றியுன் னைக் காண்மறைநின் னேய்நன்றே—நெற்றித்
திருக்கர வீரச் சிறியபிறை சூடி
திருக்கர வீரச் சிவ. (சுக)

## பெருவேளூர்.

ஊனு முயிரு முயிர்க்குயிரு மாய்நிற்பன்
றேனுந்தொண் கொன்றைத் தெரியலன்மண்—வானு
னுருவேளூர் மான முலவுமலர்ப் பொங்கர்ப்
பெருவேளூர் மானப் பிரான். (சுஉ)

## தலையாலங்காடு.

நீரும் பணியு நிலவுமிலை வேணியர்க்கு
நேரு முயர்வுமிலா நின்மலர்க்கு—மேரு
சிலையாலங் காடுந் திறற்புரஞ்செற் றார்க்குத்
தலையாலங் காடுந் தலம். (சுங)

## குடவாயில்.

செங்கைதனிற் பங்கயன்கஞ் சேவடியின் மால்கணுற்றுஞ்
சங்கையென்வீண் வாதேன் சமயிகாள்—பொங்கும்
படவாயி னஞ்சாரும் பாம்பணியாக் கொண்டோன்
குடவாயி னஞ்சாரெங் கோ. (சுச)

## திருச்சேறை.

வானைப் புரக்குமன்ன மன்மதவென் றற்பரைச்சார்ந்
தானைப் புரக்குநெஞ்சே யொண்கவிகொண்-டானைபுற்றோற்
கூறை யுடையானைக் கோமானை மாதலமாச்
சேறை யுடையானைச் செப்பு. (சுரு)

### நாலூர் மயானம்.

மாலூர் மனனே மயங்காது சென்றிறைஞ்சு
மேலூர் முகில்கண் மிசையமர்கா—நாலூர்
மயானஞ் செயநகரா வாழும் பரனைத்
தியானஞ் செயநகருந் தீது. (௯௬)

### கடுவாய்க்கரைப் புத்தூர்.

ஒன்று மெனைப்போற் றுயர்கொள் கடவுளரோ
வென்றுயரந் தீர்க்கவல்லா ரெண்கமுக—மொன்று
வரைப்புத்தூ ரத்த வயல்சூழ் கடுவாய்க்
கரைப்புத்தூ ரத்த கழறு. (௯௭)

### இரும்பூளை.

எண்ணும் பலவகைய வெண்ணிலாச் சென்மத்திற்
பண்ணுமா பாவம் பருவளிமுன்—னண்ணு
மரும்பூளை யென்ன வகன்றோடு நெஞ்சே
யிரும்பூளை யென்னலனை யேத்து. (௯௮)

### அரதைப்பெரும்பாழி.

மேவிடினு மெற்கஞ்சேன் வேண்டுவனொன் றுன்சரணி
லோவுதலில் லன்பொன் றுதவுவையேன்—மாவை
விரும்பாழி யானேய் விடையா யரதைப்
பெரும்பாழி யானே பிறப்பு. (௯௯)

### அவளிவணல்லூர்.

பத்திவை ராக்கியத்திற் பற்பலர்மா முத்திபெற்றா
ருத்திறமில் லேற்குமஃ தண்டுகொலோ—நத்தித்
திவளிவணல் லூர்வசியென் சீர்மடவா ராடு
மவளிவணல் லூர வருள். (௱)

### பரிதி நியமம்.

ஒருவுதலில் லாணவப்பே யோட்டியருள் வீரன்
வருமரண நோய்க்குமருந் தாவோன்—றிருமன்
பரிதி நியமமுறைப் பண்பூசைக் கீந்தோன்
பரிதி நியமப் பரன். (௱௧)

### வெண்ணியூர்.

ஆனதிருத் தொண்டிணையே யன்பிற் புரிகுவீர்
கானனீ ரிவ்வாழ்வு கண்டீர்மைம்—மானவே
யெண்ணிய வெண்ணியாங் கீகுவனண் பீர்நீர்சீ
ரண்ணிய வெண்ணியூ ராற்கு. (௱௨)

### பூவனூர்.

இன்றே யடைந்தே னினிதாள்வாய் கூற்றுவரு
மன்றே வருக்கு மரியதருட்—குன்றேபூத்
தேவனூ ரத்தச் சிறையனம்போ லாரனஞ்சூழ்
பூவனூ ரத்த புகல். (௱௩)

### பாதாளீச்சரம்.

தஞ்சமெனச் சார்ந்தேன் றனித்தாண் டவம்புரிநின்
கஞ்சமலர்த் தாடுன் கலப்பினின்றே—னெஞ்சந்
திரும்பாதா ளீச்சுரனே சிற்பரனே சீர்த்தி
வரும்பாதா ளீச்சரனே மற்று. (௱௪)

### திருக்களர்.

கொண்டாள் கொடுங்காதல் கூறுங் குணநான்கும்
விண்டா டுறவிபோன் மேவினணீ—கண்டாண்
மருக்களா விந்த மலர்த்தடங்கண் மேவு
திருக்களா விந்தத் திரு. (௱௫)

### சிற்றேமம்.

சன்மங்க டோறுமே தாய்முலைப்பா லுண்டதுமான்
மன்கடலே மானுமினி மாந்தரமற்—கன்மனமே
சிற்றேமத் தண்ணற் சிவன்மலர்த்தாள் சிந்தனைசெய்
மற்றேமத் தண்ணன் மகிழ்ந்து. (௱௬)

### திருவுசாத்தானம்.

மண்ணுக் கினியனுயர் வானுக் கினியனிரு
கண்ணுக் கினியனுமாங் கற்றுணர்ந்தோ-ரெண்ணரிய
வோருசாத் தானத் தொளிர்பிரம மாம்பரமன்
சீருசாத் தானச் சிவன். (௱௭)

### இடும்பாவனம்.

இம்மை மறுமை யிருமைப் பயனுநல்கு
மும்மைத் தமிழ்க்கதிபன் முன்புலவீர்—செம்மை
படும்பா வனப்பாப் பகர்ந்து புனைவீ
ரிடும்பா வனப்பாங் கிறைக்கு. (௱௮)

### கடிக்குளம்.

அழிதருமிவ் வாக்கைதனி லாக்கத்தி லார்வங்
கழிதரவே வைக்குநெஞ்சே காமுற்—றெழில்கொள்
படிக்குளத்தா னத்தீன் பருமணிமீன் போலார்
கடிக்குளத்தா னத்தற் கருது. (௱௯)

### தண்டலை நீணெறி.

வாணா ளெலாம்பொன்மின் மண்ணா தியைநசைஇ
வீணாக் கழிந்தநெஞ்சே மீதிவைகு—நாணுடித்
தண்டலை நீணெறியார் தன்மையினெற் றேர்புறம்போந்
தண்டலை நீணெறியாற் சார். (௱௰)

9317



## கோட்டூர்.

வளர்தல் சுருங்கன் மடங்கலிவை யின்றித்
தளர்வினன்மா யோகியர்சித் தத்துட்-கிளருமன்பர்க்
கார்ந்திருக் கோட்டூ ரரவமணி சம்புவருள்
கூர்ந்ததிருக் கோட்டூர்க் கொழுந்து. (௱௧௧)

## வெண்டுறை.

குறிகுணமுன் னில்லெனினுங் கூர்ந்தவன்ப ருள்ளே
குறிகுணமா நின்றருள்வான் கூறு—நெறியினெஞ்சே
வெண்டுறை வானை வியன்பதியே கோயிலாக்
கொண்டுறை வானைக் குறி. (௱௧௨)

## கொள்ளம்பூதூர்.

அன்புடையார் பாற்சென் றவர்கருத்தைச் சோதனைசெய்
தின்பருளும் பண்புணர்ந்து மெய்திலனம்—தென்புரிவேன்
கள்ளம்பூ தூர்வை கவின்முடியின் மேலணிந்த
கொள்ளம்பூ தூர்வைகுங் கோ. (௱௧௩)

## பேரெயில்.

திருக்கரத்திற் கஞ்சன் சிரமுங் கமலத்
திருக்கழலின் மால்கணுமந் தேவர்—தருக்ககற்று
மேரெயில் வாய்மை யிவர்ந்துலவு மாண்புடைய
பேரெயில் வாய்மைப் பிரான். (௱௧௪)

## கொள்ளிக்காடு.

மிக்கபுக ழாரூர் விளங்குதிரு வானைக்கா
செக்க ரருணை சீகாளத்தி—முக்கண்ண
வள்ளிக்கா டத்த மணிமன்றிவ் வைந்தொடுசேர்க்
கொள்ளிக்கா டத்தன் குடி. (௱௧௫)

## தெங்கூர்.

வெள்ளியங் குன்றமதின் மேவும் பரஞ்சோதி
யொள்ளியகண் மாதோ டுறையுமிடம்—வள்ளியமா
வங்கமுக மென்றெங்கூ ராலோ னிவைமடவா
ரங்கமுக மென்றெங்கூ ராம். (௱௧௬)

## நெல்லிக்கா.

மாலாய் விழைவினென்றன் மாதுமயன் மன்னுமலர்
மேலா யனமேவா மேபரனாய்க்—கோலானாள்
சொல்லிக்கா மன்னை துலங்குமிடப் பாகனா
நெல்லிக்கா மன்னை நினைந்து. (௱௧௭)

## நாட்டியத்தான்குடி.

மன்னும் வரிச்சங்க மாபதும மாவரம்பை
மின்னுமணி வேழமுன்செய் மேவியே--பொன்னகரா
மன்னாட்டி யத்தான் வயங்கைந் தொழில்புரிவோன்
கொன்னாட்டி யத்தான் குடி. (௱௧௮)

## காறாயில்.

அன்பொன் றிருக்கி னனைத்துநல்கு நெஞ்சமே
மின்பொன்னில் வைக்குநசை விட்டவன்றாட்-கன்புறுவாய்
கூறாயி லானைக் குலவொருபால் பெண்ணானைக்
காறாயி லானைக் கனிந்து. (௱௧௯)

## கன்றாப்பூர்.

தொடர்ந்தவினை யெல்லாந் தொலைந்தோடு நெஞ்சே
படர்ந்தபவ வேரும் பறியு—மடர்ந்தவன்பிற்
பொன்றாப்பூர் வத்துதயன் போல்வண்ணத் தானைச்சீர்க்
கன்றாப்பூர் வத்துதனைக் காண். (௱௨௦)

## வலிவலம்.

பொன்னகமா வில்லும் புலிபுரக்கு மால்கணையு
மென்ன பயன்பயந்த வெண்மையதாம்-புன்னையிற்
கூர்ந்த வலிவலத்தார் கொன்முப் புரம்வெற்றி
யார்ந்த வலிவலத்தார்க் காங்கு. (௱உ௧)

## கைச்சினம்.

நரகமெனக் கூற்றுவனார் நாடிவந்து நெஞ்சமே
யாகமவே றுவிவே றுக்குமுன்—னாகப்
புழைக்கைச் சினத்தானை பூசனைசெய் தேவைக்
குழைக்கைச் சினத்தானைக் கூறு. (௱உ௨)

## கோளிலி.

அருமைத் திருமைந்த னனதூஉ மன்றி
யொருமைக் குருவாயு முற்று—னிருமைக்கார்
கோளிலியம் மார்க்குங் குலவுமதி தோய்மாடக்
கோளிலியம் மாற்குக் குகன். (௱உ௩)

## திருவாய்மூர்.

என்போ லிருவினைக்கே யீடாய்ப் பிறந்துழல்வார்
முன்போ யிரத்தன் முறையோசொ—லின்போத
மாத்திருவாய் மூர்த்தியா வாழ்த்துபவர் முன்வரும்பூங்
காத்திருவாய் மூர்த்தியா கா. (௱உ௪)

## திருமறைக்காடு ஆகிய வேதாரணியம்.

மன்றுணையா மைந்தரப்பர் வாக்கின் மறைக்கதவ
முன்றிறந்து சாத்து முறைதுதியாய்—நன்றுளமே
நெஞ்சமறைக் காட னிலையறியா ரீர்மயன்செய்
யஞ்சமறைக் காட னருள். (௱உ௫)

### அகத்தியான் பள்ளி.

அன்பாரீ ராட்டி யவிர்சாந்தப் பொட்டிட்டே
யின்பா வலங்கலணிந் தேத்துவே—னின்பாரப்
பண்ணு ரகத்தியான் பள்ளியம ரீசனைச்சீர்
கொண்ணு ரகத்தியான் கொண்டு. (ாஉசா)

### கோடிக்குழகர்.

துறந்தவர்போ லெல்லாந் துறந்தயர்மின் செய்தி
திறந்திசூழ்மை மேகமே நீபோய்ச்—சிறந்தவிர்செய்
குன்றமருங் கோடிக் குழகர்க் குரைத்தொலையிம்
மன்றமருங் கோடிவரு வாய். (ாஉஎ)

## ஈழநாட்டிலுள்ள ஸ்தலங்கள்.

### திருக்கோணமலை.

மாதவனு மாண்சத்தி வாரியிடை வைகுதல்போ
லோதநடு நீயு முகந்தனையோ—கேதகையை
மாண மலையானே வானவர்கள் போற்றுதிருக்
கோண மலையானே கூறு. (க)

### திருக்கேதீச்சரம்.

அலம்போத நாப்ப ணனைத்துமுற்ற மோர்மாக்
கலம்போன்மன் னீழத்துக் காய—நிலம்போற்றுங்
கேதீச் சரமாங் கிளர்தலத்தாற் காம்விலங்கள்
மாதீச் சரமா வரன். (உ)

## பாண்டியநாட்டில் உள்ள ஸ்தலங்கள்.

### திருவாலவாய் ஆகிய மதுரை.

உன்னுடனின் சீருரைக்கவெளி தாருமோ
பன்னுப் படைத்தவர்க்குப் பன்னரிதேன்—முன்னூர்
தருவால வாயமருஞ் சற்குருவே கூடற்
றிருவால வாயமருந் தே. (க)

## திருவாப்பனூர்.

செல்வ முயற்சிதனிற் செல்ல லுறினுமுற்ற
செல்வச் செருக்கிற் றியங்கினுமச்—செல்வம்போய்ப்
பேராப்ப னூரையம் பெற்றுழலி னும்மறவேன்
பேராப்ப னூரையன் பேர். (உ)

## திருப்பரங்குன்றம்.

ஆறு வெண்ணெயுந்தா னுக்கி யினிதாண்டான்
காறுர் கடம்பணியுங் காளைக்கு—வாறு
மிருப்பரங் குன்று விளம்பிடியை நல்குந்
திருப்பரங் குன்றூர் சிவன். (ங)

## திருவேடகம்.

காணவத்தை யெல்லாங் கவிந்துகொண்மு னென்னைமறை
யாணவத்தை நீக்கி யருள்புரிவாய்—மாணவுத்தேர்
நாடகத் தானே நலங்குலவுந் தூயதிரு
வேடகத் தானே யினிது. (ச)

## கொடுங்குன்றமாகிய பிரான்மலை.

பூவி லயனும் புவிமங்கை நாயகனுந்
தேவரோ டேவருமே செப்புமற்ற—யாவுமே
யங்கொடுங் குன்ற னடிமுடிவைத் தாளுவா
யங்கொடுங் குன்ற வர. (ரு)

## திருப்புத்தூர்.

பாயிரமா நான்கு பழமறைக்குஞ் சொல்லலரி
தாயிரமா நாவாற்கு மன்ற்றாமோர்—தூய
மருப்புத்தூர் வையவையன் மன்றுதை குன்றுத்
திருப்புத்தூர் வையவையன் சீர். (சா)

## திருபுனவாயில்.

சென்றநா ளெல்லாஞ் செனனமா காதநா
ணின்றநா ளெல்லா நிலைபெறுநா—ளென்றே
மனவாயி லன்பால் வழுத்துபுசிந் திப்பேன்
புனவாயி லன்பாற் புரிந்து. (௭)

## இராமேச்சுரம்.

தனுக்கோடி யங்கந் தளருமுன்னன் பீர்நீர்
தனுக்கோடி தீர்த்தந்தோய் தந்தா—தனுக்கோட்டுத்
துய்ய விராமேச் சுரற்றொழுவீ ரின்கதிமுன்
வெய்ய விராமே விடும். (௮)

## திருவாடானை.

கான்றனுளன் மேவி யிருக்கின்ற மையால்யான்
றென்றிசைக்கோ மாற்குச் சிறிதுமஞ்சே--னென்றுஞ்
செழுந்திருவா டானைத் திகிரியன்போற் றென்சீ
ரெழுந்திருவா டானை யிறை. (௯)

## திருக்கானப்பேர் ஆகிய காளையார் கோயில்.

அன்னமுடை யாதி யனைத்து மளிப்பனெஞ்சே
யுன்னரிய வின்பு முவந்தருள்வான்—றன்னிழல்காய்
தானப்பே ரூரானைத் தானர்ச் சனைபுரிசீர்க்
கானப்பே ரூரானைக் காண். (௧௦)

## திருப்பூவணம்.

கானவெய்யோன் மேலூன்றிக் கஞ்சனடுக் கங்கிளிக்கை
கானகமே காட்டுங் கவின்பூவைக்—கான
வுருப்பூ வணத்தா னுவந்துதொழு தேத்துந்
திருப்பூ வணத்தான் றிறல். (௧௧)

## திருச்சுழியல்.

ஆனே முகைக்கு மரசங் கரவிமல
சேனோர் கருங்கட் சிவைபங்க—ஆனேய்
கருச்சுழிய லுற்றுக் கலங்கெனைக்கை தூக்காய்
திருச்சுழிய லுறற சிவ. (௧௨)

## திருக்குற்றாலம்.

சாத்தடைமா பூக்கொண்டு சங்கரியைக் கும்பனெஞ்சே
யேத்தடைமா தேவாசசெய் தேத்தருஞ்சீர்த்-தேத்தடைமா
வுற்றாலத் தண்ணலையே யொள்ளருவி வீழெழில்கூர்
குற்றாலத் தண்ணலையே கூறு. (௧௩)

## திருநெல்வேலி.

நின்று தொழுது நினைவையவர் சேவடியி
னன்றுவைப்போ ராருமுத்தர் நன்னெஞ்சே-சென்றுதொழு
தொல்லைவே தந்தமுத்த மக்தகைமை சொல்லரியார்
நெல்லைவே தந்தமுத்தர் நேர். (௧௪)

# மலைநாட்டில் உள்ள ஸ்தலம்.

## திருவஞ்சைக்களம்.

பாவலன்கைம் மாமீதும் பார்த்திபன்பாய் மாமீது
மாவலிற்செல் வான்கயிலைக் கன்றுய்த்த—தேவலப
விஞ்சைக் களத்தார் வியப்போதை மேவுதிரு
வஞ்சைக் களத்தா ரருள். (௧)

# கொங்குநாட்டில் உள்ள ஸ்தலங்கள்.

## திருப்புக்கொளியூ ரவிநாசி.

சுகதுக்க வார்ப்புவிஞெய்த் தன்முதலை வுண்ட
மகவழைத்த மூதூர் மயில்கா—வகவுதிருப்
புக்கொளி யூரவி நாசிமன்னைப் போற்றிமுன்செய்
மிக்கொளி யூரன் வியந்து. (௧)

## திருமுருகன் பூண்டி.

கயலவர்பாற் சென்று கவிநவிலு நெஞ்சே
புயனிறமால் காணருந்தாட் பொன்னம்—புயமலரை
வேண்டி யுளாரை விழையாத் திருமுருகன்
பூண்டி யுளாரைப் புகழ். (உ)

## திருநணா ஆகிய பவானிகூடல்.

உண்டு முடித்து முறங்கியுமுன் னாரின்பங்
கண்டுமெந்தோ காலங் கழிப்பீர்சீர்—மண்டுந்
திருநணா வண்ணா ரிருந்தா டுதிப்பீர்
கருநணா வண்ணங் கடிது. (௩)

## கொடிமாடச் செங்குன்றூர் ஆகிய திருசெங்கோடு.

உருவினையே சிந்தனைசெ யுள்ளமே முத்தி
யிருவினைநீத் தங்குநல்கு மிங்குத்—தருமன்
படிமாடச் செங்கும் பரவிநிற்குந் தேவன்
கொடிமாடச் செங்குன்றூர்க் கோ. (௪)

## வெஞ்சமாக் கூடல்.

உரிதருதன் றோலினைவிட் டோடரவம் போலப்
பிரிதருமுன் னன்புடையீர் பேணி—விரிதருகா
வெஞ்சமாக் கூடலமர் வித்தகரைப் போற்றுதிரிவ்
வஞ்சமாக் கூடழிந்தான் மா. (௫)

## திருப்பாண்டிக் கொடுமுடி.

அல்லினுமைக் கூந்தலுமை யன்னையிடப் பாக்குன்ற
வில்லிநிற்கு வேண்டுதல் வேண்டாமை-யில்லெனினும்
வேண்டிக் கொடுமையுளேன்வெவ்வினைதீர்த்தாள்வைதிருப்
பாண்டிக் கொடுமுடியப் பா (௬)

### கருவூ ரானிலை.

வடிவுடைய மாதர்பால் வைக்கும் பெருக்கில்
வடிவினிற்காற் பங்குநெஞ்சே வைப்பாய்—வடிவமுரு
வங்கருவூ ரானிலைய மம்பொ னரங்கமா
மங்கருவூ ரானிலையற் கன்பு. (௭)

## நடுநாட்டில் உள்ள ஸ்தலங்கள்.

### திருநெல்வாயிலரத்துறை.

முன்னருஞ்சம் பந்தர்க்கு முத்துச் சிவிகைகுடை
சின்ன மளித்தினருள் செய்தவன்கா—ணுன்னலருக்
கன்னியநெல் வாயி லரத்துறையன் றிங்களார்
சென்னியனெல்வாயிலகுந் தே. (௧)

### தூங்கானை மாடம்.

என்னுளமன் மாய விருளகற்றி யாங்கொளிரென்
றன்னுளவுங் காட்டித் தயங்குமே—கொன்றுளவெற்
போங்கானை மாடந் துலையநவில் சீயஞ்சீர்த்
தூங்கானை மாடச் சுடர். (௨)

### கூடலை யாற்றூர்.

ஆவலிற்சந் தேகியதூஉ மாடகமுன் னீந்ததூஉம்
பாவி னறுஞ்சுவையின் பங்கொளற்கே—மேவரிய
பாடலையாற் றூரன் பதிகநவில் வானெதிர்கொள்
கூடலையாற் றூரமரென் கோ. (௩)

### திருவெருக்கத்தம் புலியூர்.

பொன்னைப் பொருளைப் புவியைவிண்ணைக் கேட்கிலனு
னென்னைத் தெரித்தின்பொன் றேயளித்தாள்-வன்னிமத்த
மாரெருக்கத் தம்புலியூ ரஞ்சடைய மஞ்சிவர்கரச்
சீரெருக்கத் தம்புலியூர்த் தே. (௪)

### திருத்தினை நகர்.

சென்றே ருழுது தினைவிதைத்தோ னுண்மகிழ
வன்றே விளைத்தநின்சித் தாரறிவார்—நின்றே
யுனைநகர முன்னஞ் சுளித்துதிப்போர்க் காப்போய்
தினைநகர முன்னஞ் சிவ. (௫)

### திருச்சோபுரம்.

தருவான் மனனேபொற் சந்நிதிமுன் னின்று
திருவா ருருவைத் தெரிசி—யருமறையா
னூபுரத்தா னத்த னுனித்துணராத் தானத்தன்
சோபுரத்தா னத்தன் சுகம். (௬)

### திருவதிகை வீரட்டம்.

மன்னகம்வின் மாசுணநாண் மால்கணையாக் கொண்டுமென்
புன்னகையி னொன்றுப் புரம்பொடித்தான்—முன்னுந் [ளே
திருவதிகை யாளிமுன் றீட்டோவ மாடத்
திருவதிகை யாளிமுன் சென்று (௭)

### திரு நாவலூர்.

மன்னு நிதியை மதித்தயரும் பேதையர்பாற்
றுன்னு வருங்கவிதை சொல்புலவீர்—பொன்னுவன்
மின்னுவ லூராவல் வீத்தளிப்பான் போற்றுதிர்நீர்
பன்னுவ லூரான் பதம். (௮)

### திருமுதுகுன்றம் ஆகிய விருத்தாசலம்.

விதந்து பகர்வாய் விபசித்துக் கொப்பில்
பதந்தந்தான் பாணரைமுன் பற்பல்—விதந்தந்
தருமுது குன்றனுவி லூற்றயர்முன் னெஞ்சே
திருமுது குன்றனுவல் சீர். (௯)

## திருநெல் வெண்ணெய்.

என்னை யடிமைகொண் டென்று ணவமகற்றித்
தன்னையுணர் நல்லறிவு தந்தனனே—யன்னையப்ப
னெண்ணுளனெல் வெண்ணெ யெரியினரக் காக்கிறைபாற்
பெண்ணுளனெல் வெண்ணெய்ப் பிரான் (௧0)

## திருக்கோவலூர் வீரட்டம்.

அந்தகா சூரனைமுன் னட்டவனென் னுள்ளத்தா
ரந்தகா ரந்தனையே யட்டமர்வான்—வந்த
திருக்கோவ லூராத் திகழுமதி சூடி
திருக்கோவ லூரார் சிவன். (௧௧)

## அறையணி நல்லூர்.

கந்தரத்தின் மானணிவோங் கைத்தலத்தி னீரணிவோ
மந்தரத்தின் பின்சடையி லம்மாட—மந்தரத்தி
னுற்றோங் கறையணிநல் லூரனருள் பெற்றோந்தீ
தற்றோங் கறையணிகு வம். (௧௨)

## இடையாறு.

ஆறுறுக் கப்புறத்தா னென்றே யாகமங்கள்
கூறுநிற் கின்றவெங் கோனமர—ரேறுஞ்
சடையா றுடையான் றகையா றுடையா
னிடையா றுடையா னிறை. (௧௩)

## திருவெண்ணெய் நல்லூர்.

மண்ணிற் புனலில் வனியில் வளியினுயர்
விண்ணிற் கலந்து விளங்குமே—யெண்ணிலிய
நாதமரு மார்வெண்ணெய் நல்லூ ரருட்டுறையான்
போதமரு மாவெண்ணெய் போல். (௧௪)

### துறையூர்.

ஆனினைந் தாடி யருளம் பலத்தாடி
யானினைந் தாடியென வேயாண்டான்—வானி
துறையூர் வசியே யுறழ்மடவா ராடுந்
துறையூர் வசியீச் சுரன். (கரு)

### வடுகூர்.

ஒளிக்கு ளொளியா யுயிர்க்கு ளுயிராய்
வெளிக்குள் வெளியாய் விளங்கி—யளிக்கு
மடுகூ ரமர வயிற்கணுமை யத்தன்
வடுகூ ரமரும் வரன். (கசா)

### திருமாணிகுழி.

திறங்கா ணடியரொடு சேர்ந்துதொண்டு செய்வாய்
பிறங்காண் பனிங்கினுறு நெஞ்சே—புறங்காடு
காணி குழியார் கனற்கட் குறள்படையா
மாணி குழியார் வரற்கு. (கஎ)

### திருப்பாதிரிப்புலியூர்.

உரையே றரைச யுறுகடலி னின்று
கரையேற விட்ட கடவு—ளுரையேறுஞ்
சீதத் திருப்பா திரிப்புலியூர்த் தேவனுளப்
போதத் திருப்பான் புரிந்து. (கஅ)

### முண்டீச்சரம்.

பண்ணரிய தானங்கள் பண்ணினுநெஞ் சேயிறையோன்
றண்ணருளைக் கன்றிமுத்தி சாருமோ—வொண்ணறவ
முண்டீச் சரத்தருவி னுற்றுமுரல் சத்தமலி
முண்டீச் சரத்தரன்றாண் முன். (கக)

புறவார் பனங்காட்டூர்.

மண்பதியுள் வானவர்தம் வண்பதியுண் மாவுரகர்
தண்பதியுண் மேலாய்த் தயங்குமால்—பண்பின்
முனங்காட்டூர் திக்குகற்பேண் முன்னோன் புறவார்
பனங்காட்டூர் திக்குண் பதி. (உ0)

திருவாமாத்தூர்.

செஞ்சடைமன் றுக்கங்கை சீறம் புலிநோக்க
வஞ்சுடிகைப் பைந்நாக மாடுமால்—விஞ்சுங்
கருவாமாத் தூர்முன் களைந்துசதி நல்குந்
திருவாமாத் தூர்முன் சிவன. (உக)

திருவண்ணாமலை.

அரியயனு நின்ற னடிமுடியைக் காணற்
கரியதெனி லெற்கெளிய தாமோ—வரியபிழை
யெண்ணுமலையா வினிப்பிறவி மேவாமே
யண்ணு மலையா வருள். (உஉ)

தொண்டைநாட்டில் உள்ள ஸ்தலங்கள்.

திருக்கச்சி யேகம்பம்.

காணியே யாதி கனங்குழையா ரீருகப்
பேணியே காலம் பெரிதிழந்தேன்—வேணியில்வா
னேகம்ப வாணு ளியங்குமுன்வந் தாள்கச்சி
யேகம்ப வாணு வினிது. (க)

திருக்கச்சி மேற்றளி.

அன்பர்க் கெளியனு யன்பகத்திற் றன்னமுபில்
வன்பர்க் கரியனும் வள்ளனெஞ்சே—துன்பில்
பொருமேற் றளியாற் புவனங்கள் போற்றுந்
திருமேற் றளியாற் றெளி. (உ)

### திருவோணகாந்தன்றளி.

வலம்வந் திறைஞ்சி வழுத்துவா யைந்தி
லலமந் துழலு மகமே—கலமன்
றிருவோண காந்தன் றெளிந்தேத் தரன்சீர்
தருவோண காந்தன் றளி. (௩)

### கச்சியநேகதங் காவதம்.

அந்தி லடைந்தே யகனே யவிரங்கைத்
தந்தி தனியர்ச் சனைபுரிசீர்—நந்தி
யனேகதங் காவதமா மந்தலத்தைக் காணு
முனேகதங் காவதமா முன். (௪)

### கச்சிநெறிக் காரைக்காடு.

கண்டளவில் வேட்டநல்குங் காழுற் றகனைபோற்
றண்டர்கோ னர்ச்சித் தருள்பெறுசீர்—கொண்ட
நெறிக்காரைக் காட்டு ணிருமலரைப் பேதக்
குறிக்காரைக் காட்டுங் குறி. (௫)

### குரங்கணின் முட்டம்.

தன்னியலைக் காட்டித் தனைத்தெரிவிப் பானுக்
கென்னியலை யானே யினிதுணர்வேன்—முன்னுஞ்
சிரங்கணின் முட்டமரூஉந் தியறலோ னீர்சூழ்
குரங்கணின் முட்டமமர் கோன். (௬)

### திருமாகறல்.

வருவிடயத் தாழ்மனனே மஞ்ஞைமேற் கொண்டு
தருவே லெறிந்துமாச் சாய்த்து—முருகன்போல்
போகற லானை புரட்டுறுசே யாற்றுதக்கார்
மாகற லானை வழுத்து. (௭)

## திருவோத்தூர்.

ஆண்பனையைப் பெண்பனைய தாக்குசித்தென் கன்மனத்தை
மாண்புடைநின் பாலுருக வைப்பதென்று—காண்புடையிற்
சேத்தூ ரரசே செகுத்தொது தொக்குஞ் சேய்நதிசூ
ழோத்தூ ரரனே யுரை. (அ)

## திருவன் பார்த்தான் பனங்காட்டூர்.

பண்ணரிய பாவம் பறிந்தறப் பவநீங்கு
மெண்ணரிய சித்தியெலா மெய்துந்—தண்ணுமைமுற்
பண்ணியவன் பார்த்தான் பனங்காட்டூர்க் கண்ணருளி
னண்ணியவன் பார்த்தா னயந்து. (௯)

## திருவல்லம்.

வல்லமுலைக் கன்னியொடு வாழ்தலமாம் வானவரில்
வல்லமென நஞ்சுண்டோன் வண்ணவுரு—வல்ல
மருவல்ல மென்றே யருள்பரமன் மேவு
திருவல்ல மென்றேஞ் சிறந்து. (௧௦)

## திருமாற் பேறு.

வழுவினண்பீர் நீவிர் வழுவுடையிக் காயம்
விழுமுனியதியொடு மேவித்—தொழுமினில
மேற்பே றுடையானை யெத்தலமு மேத்துதிரு
மாற்பே றுடையானை வாய்ந்து. (௧௧)

## திருவூறல் ஆகிய தக்கோலம்.

போகியா மிந்திரன்றன் போகந் தனைவேண்டேன்
யூகியா நின்றநிலை யுத்தமா—யோகியர்தாந்
தேறலங் கொன்றையான் சிந்தித்தே னல்குதிரு
வூறலங் கொன்றையா யுற்று. (௧௨)

## இலம்பையங் கோட்டூர்.

இடர்க்குவைப்பாந் தன்மையன்மு னேமுன் னிலையாய்ப்
படர்க்கைக்கா ளாகாமே பார்த்தாள்—சுடர்ப்பொற்
கலம்பையங்கோட் டூர்தியரி காளமமு தாக்கொ
ளிலம்பையங்கோட் டூரண்ண லே. (௧௩)

## திருவிற்கோலம் ஆகிய கூவம்.

தீண்டாத் திருவுருவைத் தீண்டிற்றென் னெஞ்சதனாற்
றீண்டாத் திருமெய்க்குத் தீட்டுளதோ—ஈண்டாங்கு
முற்கோல மன்னு முதல்வபொழி லோங்குதிரு
விற்கோல மன்னு விளம்பு. (௧௪)

## திருவாலங்காடு.

காளியுட்கச் செய்நடத்தோய் காரைக்கா லம்மையார்
கோளி லரும்பதிகங் கொள்செவியோய்—தூளிதமாம்
பாலங்காட் டங்கணனே பையரவக் கங்கணனே
யாலங்காட் டங்கணனே யாள். (௧௫)

## திருப்பாசூர்.

என்னையன்றி நின்றனக்க னேகவன்ப ருண்டெளியற்
குன்னையன்றித் தெய்வம்வே றுண்டோவோ—மன்னைமுன்
செய்நண்பா சூரற் செருமகற்றந் தோய்கன்னற் [றுட்
செய்நண்பா சூரரசே செப்பு. (௧௬)

## திருவெண்பாக்கம்.

நூலொன் றெழிலோ னுவல்பதிகங் கேட்டுணர்ந்து
கோலொன்று நல்கரனே கொண்டலொண்கா—மேலொன்று
வெண்பாக்க மேவினனே மேவடியார் தம்மோடு
நண்பாக்க மேவினனே நான். (௧௭)

## திருக்கள்ளில்

பொய்யுடலை மெய்யெனவே போற்று மிருநிலத்தீர்
மையுடலன் வந்து வருத்திடுமுன்—செய்யவல்லி
ருள்ளிலிருந் தானை யுலையவுரித் தானையெழிற்
கள்ளிலிருந் தானை யுள்ளீர் கண்டு (18)

## திருக்காளத்தி

கண்ணப்பர் வைத்த கனிந்தவன்பிற் கோடியென
வெண்ணப் படுந்தொகையி லிம்மியுமே—நண்ணுகிலே
னாளத் திகிரியங் கச்சுதற்குத் தந்தவசீ
காளத் திகிரியவெற் கா (19)

## திருவொற்றியூர்

பேய்க்கரும்பே தித்திக்கப் பெற்றவர்போ னற்றுதவும்
வாய்க்கரும்பே முற்றதுவும் வாய்க்குமோ—வேய்க்கருங்
கொற்றியூ ரம்மானேர் கூர்விழிப்பெண் பாகனே [தோட்
டொற்றியூ ரம்மானே போது (20)

## வலிதாயம் ஆகிய பாடி

சென்று தொழுவீர் சிவபுரமே யெய்துவீர்
நின்றுபய னில்லை நெடுநிலத்தீர்—துன்று
திருவலி தாயச் சிவன்றாள் புணையாங்
கருவலி தாய கடற்கு (21)

## வடதிருமுல்லைவாயில்

பணிகின்றோ னெஞ்சே பரிந்தாய வீரறு
பிணியரவ மாங்களத்திற் பீடார்—மணியரவங்
குல்லைவா யில்லாவங் கூர்தருவ டாதுதிரு
முல்லைவா யில்லானை முன் (22)

## திருவேற்காடு

நேடா வறியு நெறியறியேன் பூங்கொன்றை
யேடார் தொடையா யிருவினைகட்—கீடா

முருவேற்காட் டுள்ளமரு முத்தமனே சீரார்
திருவேற்காட் டுள்ளமருந் தே (23)

## திருமயிலாப்பூர்

சிவநேசர் பேற்றைநெஞ்சே நேர்குடத்தா ரெண்ணைத்
தவமே வணங்காச்சம் பந்த—ரவிர்கண்
பொருமையிலாப் பூர்வப் பொலிவினுறக் கண்டார்
திருமயிலாப் பூரனரு டோர்ந்து (24)

## திருவான்மியூர்

காலனுறும் போது கருதரிது நெஞ்சமே
யால மமுதாக்கொள் ளத்தன்மை—நீலக்
கருவான்மி யூரங் கவின்றன்னை மேவுந்
திருவான்மி யூரரன்றாள் சேர் (25)

## திருக்கச்சூராலக் கோயில்

வலம்வந்து முன்னின்று வாழ்த்துவாய் நெஞ்சே
சூலம்வந்த வண்டர் குலைவுற்—றலமந்
தணுங்கச்சூ ரால மருந்திறைவாழ் காகா
வெணுங்கச்சூ ராலக்கோ யில (26)

## திருவிடைச் சுரம்

எண்ணியவா வெல்லா மினிதுநல்கு நெஞ்சமே
புண்ணியமா நீறுமெய்யிற் பூசி யுள்ளந்—தெண்ணி
யிடைச்சுரத் தானை யிறைவனையாள் சேய்பா
டிடைச்சுரத் தானை யிறைஞ்சு (27)

## திருக்கழுக்குன்றம்

தலமன் கிரியாந் தனைப்பத்தி யோடு
வலம்வருவார்க் காணவமுண் வாய்ந்த—மலமென்
வழுக்குன்ற வண்மையாம் வான்கதிநெஞ் சேசீர்க்
கழுக்குன்ற வண்மையாற் காண் (28)

### அச்சிறுபாக்கம்

ஓதுநன்பி ரும்மையே யும்ப ரிறைஞ்சபுரு
கூதனு வாக்குவிக்குங் கூர்ந்தவன்பி—லாதுலருக்
காரச் சிறுபாக் களவனமிட் டேத்துவீர்
வாரச் சிறுபாக்கத் தே (29)

### திருவக்கரை

செங்கமலக் கண்வண்டுஞ் செங்கா லனமுநண்ணு
மங்கமலத் தாண்முடியா னுழ்ந்தலையும்—பங்கக்
கருவக் கரையான் கடந்தேறச் செய்வான்
திருவக் கரையான் சிவன் (30)

### அரசிலி

இம்மியிலோர் கோடியிற்கா லெய்தினோர் மாலயனோர்
தம்மினுமே லாம்பதவி தாம்பெறுவ—ரம்மின்
முரசிலி யானத்தின் முன்றிலவிர் மாட
வரசிலியா னத்த னருள் (31)

### இரும்பை மாகாளம்

பண்முழுமு தற்கடவு ளொன்பதைக்கண் பின்வழுதி
கண்புதைத்தும் வென்னடித்துங் காட்டினர்கா—ணண்பீர்
கரும்பையடா காளத்தைக் கண்மொழி வெல்வாள்கே
ளிரும்பைமா காளத் திறை (32)

## துளுவ நாட்டில் உள்ள சிவஸ்தலம்

### திருக்கோகர்ணம்

தூய நினது சுடர்வடிவங் காண்பதூஉ
மேயவருட் காதை வினவுவதூஉ—மாய
திருக்கோகர் ணத்தானே சேர்த்த தருள்வாய்
திருக்கோகர் ணத்தார் சிவ (1)

## வட நாட்டில் உள்ள சிவஸ்தலங்கள்

### திருப்பருப்பதம் ஆகிய ஸ்ரீசைலம்

சென்று தொழுதற்குச் சேய்த்தெனினு நெஞ்சமே
நின்று திசைநோக்கி நீர்த்தமிடு—மன்றற்
றிருப்பதத் தானைச் சிவனையெழி லார்சீ
பருப்பதத் தானைப் பரசு (1)

### இந்திரநீலப்பருப்பதம்

பூவிலய னாதி புலவர்புகழெலா
மேவுமினன் முன்மின் மினிபோலா—மூவுலகுஞ்
சாலப் பருப்பதத்தாற் றுயளந்தோ னேத்திந்த்ர
நீலப் பருப்பதத்தா னோர் (2)

### அனேகதங்காவதம்

ஆகந் தளர்வுற்றுள் ளாவி கழலுமுனம்
யோக நிலையுடையோ ருள்ளத்தா—ரேக
வனேகதங் காவதனே யைந்துகந்தா யெந்தா
யனேகதங் காவதனே யாள் (3)

### திருக்கேதாரம்

என்னகத்தி லாரவித்தை யென்னு மிருள்கடிந்தே
மன்னகத்திற் றீபம்போன் மல்குவாய்—நன்னளின
மாதாரத் தானோர் மருவா நிலையதிருக்
கேதாரத் தானே கிளர்ந்து (4)

### ஸ்ரீ கயிலாயம்

இனிப்பிறவி நல்கா னிரங்குமட நெஞ்சே
தனிப்பதமே நல்குவன்பொற் றாளே—புனிப்பன்
றிருக்கயி லாய சிவையம்மை கேள்வன்
றிருக்கயி லாயச் சிவன் (5)

### சிவதலத்தொகை

சோழநன்னா டோர்நூற்றுத் தொண்ணூறு வண்தல்லொன்
றீழ மிரண்டுகொங் கேழ்பாண்டி யேழுடனேழ்

தொன்னடுமூ வேழொடொன்று தொண்டையெண்ணான்
றுன்னுதக்கைந் தோர்சிவன்வா ழூர் [‘கொண்டுளநுவொன்

### நூற்பயன்

இன்னதல முற்றும்போ யேத்த லரிதெனினுந்
மன்னவன்ற னின்னருளி லன்பொடியான்—சொன்ன
சிவதலவெண் பாமுறையே செப்பினோர் மேலாஞ்
சிவதலமே வாழ்வார் தினம்

### வாழ்த்து

வாழ்கதிரு மன்றமுதல் வான்தளிலை யீருக
வாழ்கபரன் வாழ்கபரை வாழ்கமுன்னோன்—வாழ்ககுகன்
வாழ்கதண்டி வாழ்கவன்பர் வாழ்ககலை வாழ்கமுகில்
வாழ்கவுல கெல்லா மகிழ்ந்து

தேவாரச் சிவதல வெண்பா
முற்றுப்பெற்றது.

# அரும்பத விளக்கம்.

## பாயிரம்

௧. புவனி=பூமி. கற்பு+அகம்+மாது+அங்கம். மாதங்கம்=யானை.

௨. புல்—புலி. நாகம்,=பாம்பு. வில்+நாகன்=மேருவில்லான், என்+நாடு+அகம்.

௩. குவளை—நீலோற்பலம். நாட்டம்—கண். தன்+ஆனந்தம்+கொடி=சிவகாமவல்லி.

௪. நீழல்—சாயை (சுந்தரர்.)

௫. மதலை—குழந்தை. வடிவு—அழகு. ஒருத்தல்—யானை.

௬. வாமனன்=குறள். கஞ்சுகம்—சட்டை. மருவா—மருவி

௭. தாது+அகம்+மல+நஞ்சு. கமலம்—தாமரை.

௮. ஒன்று+தொல்+தாள்+தன்.

௯. மன்+அந்தி+வண்ணன். பன்+நந்தி+வள்+நல்.

௧௰. நா+ஆர்.

௧௧. சேயடி—சேவடி.

௧௨. நார்+அகத்து+இல். மந்தணம்—மந்திரம்.

௧௩. அம்போருகம்—தாமரை. ஐ+அடிகள்.

௧௪. துத்தி—படப்பொறி. இந்து+அம்பு+அணி.

௧௫. ஆன+போது+அம்+தலை.

௧௬. முளிக்கு—முள்ளிச்செடிக்கு. ஐ+வசித்து+அந்தரங்கம்

௧௭. அஞ்சு+ஆக்கு+அரன்.

௧௮. ஆக+அரும்ப+அணிந்தேன். முடிக்கு+அமலம்+ஆக-

௧௯. பங்கம்+மலம்+பாற்று.

௨௧. நாலாறு—இருபத்துநான்கு. நாதன்—சத்தமாயுள்ளவன்.

௨௨. கற்பு+அனைக்கு+உகந்தவன்.

௨௩. மேவார்—பகைவர். புலியூர் வெண்பா நுவன்றோன்—மாரிமுத்தாப்பிள்ளை. திலைவிடங்கம்—தில்லைவிடங்கன்.

## காவேரிக்கு வடகரையிலுள்ள சிவதலங்கள்

௧. எடுத்தகழல்—குஞ்சிதபாதம். மா—வண்டு.

௨. விற்கழைக்கு—கருப்பு வில்லுக்கு. ஏ—பாணம். வேட்கு—மன்மதனுக்கு. அள்—கூர்மை. அஞ்சு—ஐந்து.

௩. வாயிலான்—வாயிலார் நாயனார்.

௪. செழிப்பால்+ஈ+ஆர்+ஆசினி. ஆர்—ஆத்தி.

௫. பானல்—நீலோர்ப்பலம். திரு+மண்+நத்து+ஆயன்.

௬. பரி—வாகனம். ஆல்—ஆலிலை. கஜேந்திரன்—கருடன்.

௭. வா+இல்+ஐ.

௮. பொற்பை—பொற்கிழி. கலிக்கு—வறுமைக்கு ஊர்+என்றே.

௯. தாய்க்கு+ஆடும்+அம்+மான்.

௧௧. ஈ+சரம்+ஆம்—ஈ முதலாகிய சரவஸ்துவும்.

௧௨. பள்ளிக்குளே—பள்ளிக்கூடங்களிலே.

௧௩. அருகு+ஆ+ஊர்+வெள்+அடை.

௧௪. புரம்—தேகம்.

௧௫. ஆலம்—ஜலம். நபம்—ஆகாயம்.

௧௬. மை—ஆடு. உள்ளிருக்கு—நினையாதவராகிய உங்களுக்கு

௧௭. திருக்கு+அண்ணார்.

௧௮. கம்—கபாலம்.

௧௯. கோடிய+விளைந்த.

௨0. கூர்மத்தன்+விஷ்ணு.

௨௧. கரு+நீள்+தார்.

௨௨. ஊர்—ஊர்கின்ற. ஐயன்—அரிஹர புத்திரன்.

௨௩. மாள்+விக்குள்+தியங்கு+அவ்வாய்.

௨௪. சோ—மதில். எதிர்கொள்+பாடி+இரு.

௨௫. சேர்+இயல்+நால்+மாமலர்+உய்யானம்.

௨௬. காண்டம்—பாணம்.

௨௭. விரும்பு+அறிய. ஊரன்—சுந்தரர்.

௨௮. தரக்கு—புலி.

௨௯. கொளி—கொள்ளி.

௩0. ஆவம்—அம்பறுத்தூணி. இ+படிக்கு+அரை

௩௧. புலியூரர்+அவர்+புகழ்.

௩௨. மால்+நாட்டும்+உள்.

௩௩. மன் + ஆரை + ஊர் + அரா. ஆரை—பூண்டு.

௩௪. அண் + அனே. எங்கள் + தம் + பூரணனே.

௩௫. வந்து + அனே.

௩௬. ஊர் + ஆனே.

௩௭. உரு + கொள் + காமரு—அழகு.

௩௮. மங்கல் + மங்காதே. அக்குடி வாழ்வு + எண்ணல்.

௩௯. ஐ + அது + இருப்பு + அனம் அன்னம்.

௪0. திகம்பரன்—திசையாகிய வஸ்திரத்தையுடையவன்.

௪௧. தரு + செய்—செய்மை + நல்லூர்.

௪௨. மண்டு—மிகுந்த.

௪௩. கனம்—மேகம். ஊர்—ஊர்கின்ற. அத்தம்—ஆகாயம்.

௪௪. மேய—மேவிய. கொட்டு—பறையடித்தல்.

௪௫. வை—வைக்கோல். குடில்—குடிசை. கை—கைமரம்.
கால்—கால்கள். குடிலை—பிரணவம்.

௪௬. பயம்—ஜலம்.

௪௭. எண்—வலிமை. விசயம்—ஜெயம்.

௪௮. மானம்—அளவு. வை—வைத்த. கா—சோலை.

௪௯. துறை—துறைகள். தார்—மாலை.

௫0. தரு + பழன்(பழம்)நஞ்சு=நைந்து.

௫௧. ஆறும்—நெறியாம். ஐயாறு + ஆறு + ஐயாறு=96.

௫௨. தானம்—மதஜலம்.

௫௩. ஆதித்தரும்—சூரியரும். புலி—தழுவி. படர்—செல்.

௫௪. தாய், தாவி காது + அதிரும் + மழ + மான்.

௫௫. சேறு + கழனி. கொழு + ஊர் + அலம், கலப்பை
கோடு—சங்கு.

௫௬. கொம்பு—பூங்கொம்புபோன்ற இலக்குமி. கான்—காடு
சே—இடபம்.

௫௭. அழும் + அன்பில்.

௫௮. இறுமாந்து—இறுமாப்புற்று.

௫௯. வனம்—முல்லை நிலம்.

௬0. கம்—ஜலம்.

௬௧. மை + நீலி=நீல நிறத்தையுடையவள். ஆல்—ஆலிலை
வயின்—வயிறு.

௬௨. பொருப்பு + ஆ + சில் + ஆ + சிரமம்.

௬௩. சுரும்பு—வண்டு. பாங்கோய்—பக்கத்திலுள்ளவனே. மலைவு + இல்.

### காவேரித் தென்கரையிலுள்ள தலங்கள்

௧. நாள் + போக்கி + யான் + நைகின்றனன்.
௨. அடம்பு + அம் + துறை + ஆர்.
௩. விருப்பராய்—விருப்பத்தையுடையவராய். அனம்—அன்னம்.
௪. கடிய—கொல்ல.
௫. கொண்மூ—மேகம். கீச்சு—அரவம்.
௬. அரா + பள்ளியான்—திருமால்.
௭. வால்—வெண்மை. வன்னம்--நிறம். எறும்பி—யானை
௮. களம்—யுத்தகளம்.
௯. பிணை—பெண் மான்.
௧௦. பொழில்—உலகம்.
௧௧. சேந்து=சிவந்து. உருத்து—கோபித்து. யான்—நான்
௧௨. அன்ன + கம்—கபாலம்
௧௩. ஆறு + துறை.
௧௪. மெல்லோதி—உமை.
௧௫. என் + குடித்திட்டு + ஐய.
௧௬. விரும்பு + உள்ளம் + அம் + கை.
௧௭. வெம் + சக்கு + அரா—வெய்ய கண்ணை உடைய பாம்பு.
௧௮. தருக்கர்—செருக்கர். உகா—கெடாத.
௧௯. வேலை—சமுத்திரம். துறை—நெறி.
௨௦. நெருநல்—நேற்றையதினம்.
௨௧. பாற்று + ஆம். அவா—விருப்பம்.
௨௨. பத்தி + முற்று + அன்பர்.
௨௩. கள் + தீ + சரத்தான். வில்—கரும்பு.
௨௪. அன்பு + அழை + ஆய் + தை + அரிக்கு பரிதிதந்தான்-
௨௫. அவல்—பள்ளம் + அஞ்சுழி—அஞ்சுமிடத்து.
௨௬. ஊக்கம் + மரும்—மருவும்.
௨௭. கூலம்—கடை. காழ்—வைரம்.
௨௮. மடந்தை—இலக்குமி. கார்—கரிய நிறத்தையுடைய ஓணைத்தான்—திருமால்.
௨௯. பாய் + அதிரும் + நாகு + ஏர்.

௩௰. இடை—நடு. மருது + ஊர் + ஆயன்.

௩௧. காடு + துறை + அண்ணல் (எதிர்மறை ஒருமை ஏவல்.)

௩௨. மூலம் + குடிலையன்.

௩௩. வை + கல் + மாடம்,

௩௪. வான் + அகம், வால் + நகம்—வெள்ளிமலை

௩௫. மானவன்—மனிதன்.

௩௬. மருவா + வடு + துறை + ஆய்.

௩௭. துருத்தி—கொல்லனது ஒருவகைக்கருவி.

௩௮. சால + அழும் + தூரத்தன்.

௩௯. மின்னும் + அயில் + ஆடு.

௪௰. துன்ன + விள் + அநகர்.

௪௧. உரு + பறி(பொன்)அல் + ஊர் + ஆலம்

௪௨. கொன் + பள்ளியான்.

௪௩. முனிபு + அள்ளி + ஆர்ந்தான்.

௪௪. வல் + அம்பு + உரத்தில்.

௪௫. கலைச்சு + அங்கு = ஆடு + ஆயம் (பெண்கூட்டம்)

௪௬. கண் + தீ + செங்கதிர் + உலா + கூர்.

௪௭. செருக்கு + அட + ஊர்.

௪௮. மயானம்—இடுகாடு.

௪௯. கூன் + நகத்தான்.

௫௰. பற்று + எளி + சேர் + இயல்.

௫௧. புரந்து + ஆள்.

௫௨. நள் + ஆற்றின் + அம்பி (தோணி.)

௫௩. என் + திருக்கு + ஓட்டு + ஆற்றல்.

௫௪. ஒருங்கு + ஒயில்.

௫௫. மா + களம்.

௫௬. சூர் + அத்த.

௫௭. அ + சூரியன்.

௫௮. பதியார்—எதிர்மறைவினை முற்று.

௫௯. பாம்பு + உரத்தார்.

௬௰. மறுகுள் + தியாகர்.

௬௧. தென் + தரு + வாய்.

௬௨. வன்னி = மரம், ஊர் + அத்தம் + மணி.

௬௩. கருவில் + யான் + றைந்து.
௬௪. இருந்து + உறையான்.
௬௫. முத்தீ + சரதம்.
௬௬. வரைப்பு + தார் + முத்து + இவரும்.
௬௭. பவ + புரம் + மன் + நல்.
௬௮. கலயம்—கும்பம்.
௬௯. செருக்கு + உள் + தியானம்.
௭௰. அம் + மன் + ஐயம்.
௭௧. ஊணன்
௭௨. திருக்கு + ஒண் + தீ.
௭௩. ஊர் + ஆனை.
௭௪. கருவில் + குடியா
௭௫. புகல் + ஊர் + செல்...மேகம்,
௭௬. அர்த்தம் + மான் + நீச்சு + அரும்.
௭௭. அந்தை + இரா + மனத்தீர், அந்தை—அகந்தை
௭௮ இயற்று + ஊர் + அரவு
௭௯ அஞ்செம்—தன்மைப்பன்மை, எதிர்மறைவினைமுற்று,
௮௰ திரு + மருகன் + ஆய
௮௧ சாத்தம்...தன்மைப்பன்மை வினைமுற்று
௮௨ மூன் + ஆகைக்கு + ஆர் + ஒணன்
௮௩ மா + சிக்கல் + ஆம் + மனனே.. மன்னனே
௮௪ வேள் = மன்மதன்
௮௫ வான் + அமரும்
௮௬ மூக் + கூடல் + புணர்ப்பு
௮௭ திரு + ஆர் + ஊரன்
௮௮ கார் + ஊர் + அரம் + நெறி
௮௯ உள் + மண் + தளியார்
௯௰ களமர் + அணி, இடைக்குறை
௯௧ திருக்கு + அர + ஈரம்
௯௨ யானம் = வாகனம்
௯௩ சிலையால் + அங்கு + ஆடு
௯௪ படம் + வாய் + இனம் + சாரும் + நஞ்சு + ஆர்
௯௫ கூறு + ஐ + உடையானை

கூசு செய—இடைக்குறை

கூஎ வரைப்பு + தூரத்த

கூஅ பூளை = பஞ்சு

கூகூ விரும்பு + ஆழியான்

கயய திவள் + இவள் + நல் + ஊர்வசி.

க0க பரிதி—சக்கரம்

க0உ எண்ணிய + எண்ணியாங்கு

க0௩ ஊர் + அத்தம்

க0ச திரும்பாது + ஆள் + ஈச்சுரனை

க0ரு மரு + கள் + அரவிந்தம்

க0சு மற்று + எமத்து + அண்ணல், எதிர்மறை வஉல்

க0எ உசா — ஆராய்வு

க0அ பா + வனப்பு + ஆ

க0கூ படி + களத்து + ஆல் + நத்து + ஈன்

கக0 தண்டலை—சோலை, எல் + தேர், எல்—சூரியன்

ககக திருக்கு + ஒட்டு

ககஉ வீரன் + ஐ + கொண்டு + உறைவானை

கக௩ கள் + அம் + பூ + தூர்வை—அறுகு

ககச ஏர் + எயில் + வாய் + மை + இவரும்

ககரு வள் + இக்கு + ஆடு + அத்தம்

ககசு அம் + கமுகம் + மென் + தெங்கு + ஊர் அங்கம் + முகம் +
என்

ககஎ சொல் + இக்கு + ஆம் + அன்னை

ககஅ மன் + நாட்டியத்தால்

கககூ கூறு + ஆய் + இலானை

கஉ0 பொன்று + பூர்வத்து + உதயன்

கஉக வலி + வலத்தார் = வலிவும் வெற்றியுமுடையவா

கஉஉ புழை + கை + சினத்து + ஆனை

கஉ௩ கார்கோளில் + இயம் + ஆர்க்கும், கார்கோள் — கடல்

கஉச மா + திரு + வாய் + மூர்த்தியா

கஉரு நெஞ்சம் + அறைக்கு + ஆள் + தல்

கஉசு கொள் + நார் + அகத்து + யான்

கஉஎ மன்றம் + மருங்கு + ஒடி

## ஈழ நாட்டிலுள்ள ஸ்தலங்கள்

௧ மாணை + மலையானே

௨ ஆம் + வில் + அம் + கல் + மா + தீ + சரம் + மாதொரன்

## பாண்டிய நாட்டிலுள்ள ஸ்தலங்கள்

௧ தரு + ஆல் + அவாய் + அமரும்

௨ பேரா + பண் + ஊர் + ஐயம்

௩ இருப்பர் + அம் + குன்று

௪ நாடு + அகத்தானே

௫ அங்கு + ஒடுங்கு + உன் + தன்

௬ மருப்பு + தூர்வைய + ஐயன்—வைய வையன்—பூமியா
கிய தேரை உடையவன்

௭ மனம் + வாயில் + அன்பால்

௮ வெய்ய + இராமே + விடும்

௯ செழும் + திரு + ஆள் + தானை—படைக்கலப்பெட்டாது

௧௦ தானம் + பேர் + ஊர் + ஆனை

௧௧ பூ + வணைத்தான்

௧௨ சுழியல் + சுழிகை

௧௩ உற்ற + ஆல + தண் + அலை + எய்

௧௪ வேதம் + தம் + உத்தமம்

## மலை நாட்டில் உள்ள ஸ்தலம்

௧ விஞ்சை + களத்து + ஆர்

## கொங்கு நாட்டில் உள்ள ஸ்தலங்கள்

௧ மிக்கு + ஒளி + ஊரன்

௨ உளாரை, இடைக்குறை

௩ கரு + நஞ்சு + வண்ணம்

௪ படி + மாடு + அச்சு + (உயிர்-) + எங்கும்

௫ வஞ்சும் + மா + கூடு + அழிந்து + ஆன்மா

௬ வேண்டி—விரும்பி

௭ அங்கு + உரு + ஊர் + ஆன் + நிலையம்

## நடு நாட்டில் உள்ள ஸ்தலங்கள்.

௧ எல் + வாய் + இலகும்

௨ வெற்பு + ஓங்கு + ஆனை + மாள் + தந்து

௩ ஆற்று + ஊரன்
௪ ஆர் + எருக்கு + அத்து + அம்புலி
௫ நகரம் + முன் + அஞ்சு + உன்னி
௬ நூபுரத்தான் + நத்தன்
௭ திரு + வதி + கை + யாளி
௮ மின் + ஆவல் + ஊர்
௯ உரு + முதுகு + உன் + தனு
௧௰ என் + உளன் + எல் + வெண்ணெய்
௧௧ திருக்கு + ஒவு + அல் + ஊரா
௧௨ உற்று + ஒங்கு + அற்றேும்
௧௩ சடை + ஆறு + உடையான்
௧௪ போது + அம் + மரு
௧௫ வசி
௧௬ கூர் + அமர + அயில்
௧௭ ஊழி + ஆர்
௧௮ போதத்து + இருப்பான்
௧௯ உண்டு + ஈ + சரம் + தரு
௨௰ முன் + அங்கு + ஆடு + ஊர்தி
௨௧ கரு + ஆம் + மா + தார் + முன்
௨௨ எண்ணுமல் + ஐயா

## தொண்டை நாட்டில் உள்ள ஸ்தலங்கள்.

௧ எகு + அம்ப + வாழ்நாள்
௨ பொரும் + எற்று + அளியான்
௩ திரு + ஒணன் + காந்தன் = இலக்குமிக்கும் திருமேவாணத நிற்கும் தலைவனுகிய விஷ்ணு
௪ முனே + கதம் + காவதம்... முன்னே கோபம் காதம்
௫ குறிக்காரை... குறிக்காதவரை
௬ சிரம் + கணில் + முட்ட + மரூஉம் + தீ + அறலோன் கண்ணிலும் சிரத்திலும் நிரம்ப தீயையும் சலத்தையுமுடையவர்
௭ போகு + அறல் + ஆனை
௮ சே + தார் + அரசு
௯ பண் + இயம். பார்த்தால் நயந்து
௧௰ அருவு + அல்லம் + என்றே

௧௧ ஏற்பு ஏறு + உடையான்

௧௨ தேறல் அங்கு + ஒன்றை + யான்

௧௩ கலம் + பை + அங்கு + ஒன்றை + யான்

௧௪ முன் + கோலம் + மன்று

௧௫ பாலம் + காட்டு அம் + கண்ணனே

௧௬ செய் + நண்பா, செய் + நண்

௧௭ மேவு + இனனே

௧௮ உள்ளிவிர் + உந்து + ஆனை

௧௯ ஆள + திரி + அங்கு

௨௰ ஊர் + அம் + மான்

௨௧ கரு + வலிது · ஆய

௨௨ குல்லை + வாய் + அரவம்

௨௩ உருவேன் + காட்டு + உள் + அமரும்

௨௪ பொரும் + அயில் + ஆ + பூர்வம்

௨௫ கருவான் + மி + ஊரும்...மி...குறுக்கல்விகாரம்

௨௬ அனுங்க + சூர் + ஆலம்

௨௭ சுரத்தால் + கை

௨௮ வழு + குன்ற + அண்மை + ஆம்...வண்மை + யான்

௨௯ ஆர + சிறு + பாக்கு + அளவு

௩௰ கரு + அக்கரை + யான்

௩௧ முரசில் + யானத்தில்

௩௨ கரும்பை + மா + காளத்தை

## துளுவ நாட்டிலுள்ள சிவஸ்தலம்.

௧ திருக்கோ + கர்ணம் + தானே

## வட நாட்டிலுள்ள ஸ்தலங்கள்

௧ திரு + பதத்தான்

௨ சால + பரு + பதத்தால்

௩ அனேக + தங்கு + ஆ + அதன் + எய்

௪ மா + தாரத்தான்

௫ இருக்கு + அயில் + ஆய

# பிழைதிருத்தம்.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௧௧ | ௨௪ | ௨ | மஞ்சிவர்சே | மஞ்சிவர்சோ. |
| ௧௨ | ௨௧ | ௩ | மாமதிசேர் | வெண்மதிசேர் |
| ௧௪ | ௩௯ | ௧ | ஙண்பிற் | ரண்பிற் |
| ,, | ௪0 | ௩ | மொன்மெறன் | மொன்மெறற் |
| ௧௫ | ௪௫ | ௧ | கொண்டாகு வரி | கொண்டாக்கு வரி |
| ௧௬ | ௫0 | ௨ | மொப்பில் | யொப்பில் |
| ௧௯ | ௪ | ௨ | சேலுகன் | சேலுகள் |
| ௨0 | ௯ | ௨ | வேற்றி | வேறறி |
| ௨௨ | ௨0 | ௩ | நெடுநல் | நெருநல் |
| ௨௪ | ௨௯ | ௩ | மார்பு | மார்ப்பு |
| ௨௭ | ௪௨ | ௨ | காவா | கரா |
| ௨௯ | ௫௩ | ௪ | லா | வா |
| ௩0 | ௫௬ | ௩ | வேலேலெவந்தை | வேலேலெந்தை; |
| ௩௧ | ௮௫ | ௨ | சமயர் | சமயா |
| ௩௨ | ௭0 | — | திருவாஞ்சியம் | திருவாஞ்சியர் |
| ௩௬ | ௮௭ | ௧ | பெங்காவ | பொங்காவ |
| ௩௭ | ௯௧ | ௨ | நேய்நன்றே | நேயநன்றே |
| ௪0 | ௱௬ | ௨ | மாந்ரா | மாந்தா |
| ௪௧ | ௱௧௧ | ௩ | கார்ந்திரு | கார்ந்ததிரு |
| ௪௩ | ௱௨௨ | ௨ | யாகம | யாகம் |
| ,, | ௱௨௫ | ௩ | நீர்மயன் | நீர்மையன் |
| ௪௪ | ௨ | ௧ | மோர்மாக் | வோர்மாக் |
| ,, | ,, | ௩ | விலங்கள் | விலங்கன் |
| ,, | ௧ | ௨ | வர்க்குப் | வர்க்கும் |
| ௪௫ | ௩ | ௨ | மாணவுத்தோர் | மாணவத்தோர் |
| ௪௬ | ௯ | ௩ | ஞெருஞ்சி | நெருஞ்சி |
| ௪௮ | ௩ | ௧ | மூன் | மின் |
| ,, | ௬ | ௧ | பாக்குன்ற | பாகுன்ற |
| ௪௯ | ௨ | ௨ | கொன்று | கொன்னு |
| ௫௨ | ௧௮ | ௧ | நரைச | நரைசை |